Registered as a Newspaper

ஜார் VIDEO COMPLEX
Any Functions at your Home? Remember this name for VIDEO RECORDING
'RAJ-COT,' NEAR POST OFFICE, KONDAVIL EAST, KONDAVIL.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ-1/=

உங்கள் வாழ்க்கையில் என்றோ ஒருநாள் வரும் அந்த மறக்கமுடியாத நிகழ்ச்சிகளை என்றும் உயிரோவியமாக வீடியோ படம்பிடித்திட நாடுங்கள்'
ஸ்ரார் வீடியோ கொம்பிளெக்ஸ்
'ராஜ்-கொற்' தபால்கந்தோரடி கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

கடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸூ தை மீ 1 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 3 (14-01-1986) UTHAYAN – A LIVELY TAMIL DAILY கதிர்:-49

# சர்வதேச யுத்த நிறுத்த குழுவே உடன் தேவை

## சென்னையில் அமிர் அறிக்கை

சென்னை, ஜன.13

போராளிகளின் சார்பில் நியமிக்கப்பட்ட இரு உறுப்பினர்களும் இலங்கை அரசின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இருந்து ராஜினாமாச் செய்துவிட்டதால் அந்தக் குழு செயல் இழந்துவிட்டது.

எனவே, சர்வதேச யுந்தநிறுத்த கண்காணிப்புக் குழு ஒன்றை உடன் நியமிப்பது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் கருத்து வெளியிட்டுள்ளார். சென்னையில் (நேற்று ஞாயிற்றுக்கிழமை) விடுத்த பத்திரிகையாளர் அறிக்கை ஒன்றில் திரு. அமிர்தலிங்கம் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்த நிறுத்தக் குழுவில் அங்கம் வகித்த இரண்டு தமிழ் உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்து விட்டனர். அவர்கள் போராளிகளின் சிபார்சில் நியமிக்கப்பட்டவர்கள்.

இலங்கைஅரசின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு இடபோது செயல் இழந்தவிட்டது. எனவே முறையான யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஒன்றை அரசு உடன் நியமிக்க வேண்டும். அது அரசாங்கத்தின் பொறுப்பு.

சர்வதேச யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஒன்றை நியமிப்பதே முறை இதனை அரசு கருத்தில் கொள்ள வேண்டும். அபபோதுதான் யுத்த நிறுத்தத்தை அமுல் செய்ய முடியும்.

அரசாங்கத்தின் செயல் திட்ட அறிக்கைக்கு நாம் மாற்றுத்திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்தோம். ஒரு மாத காலமாகிவிட்டது. இன்னும் ஆக்கபூர்வமான பதில் இல்லை. மாற்றுத் திட்டத்தைக் கருத்தில் கொண்டு வருவதாக மட்டுமே தகவல் கிடைத்துள்ளது. பந்து தமிழர் பக்கத்தில் என்று அரசு கூறியது இப்போது அரசின் பக்கத்தில்தான் அது உள்ளது

அப்பாவி மக்களைக் கொல்வதை நிறுத்தி இராணுவ நடவடிக்கையைக் கைவிட்டு பிரச்சினையைத் தீர்ப்பதில் இலங்கை அரசு கவனம் செலுத்தவேண்டும்.

சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு குடியுரிமை வழங்கியது வரவேற்கத்தக்கது. 1984 ஆம் ஆண்டிலேயே அவருக்குக் குடியுரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்திருப்பின் சர்வகட்சி மாநாட்டில் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்பட வாய்ப்பு உண்டாகி இருக்கும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முச்சந்திமுரளி



சண்ணீரும் கம்பலையுமாய் இப்ப அடக்கமான பொங்கல் செய்தாப் போலை இது தான் விதி எண்டு இல்லைத்தானே. எங்களுக்கும் காலம் வரும்.... காலம் வந்தால் வாழ்வு வரும்.. தன்னன தன்னனே!

## உதயனின் பொங்கல் வாழ்த்து



காலைவேளை. உதயன் ஏழு 'ரிதிகள் பூ'டிய தேரில் எழுந்துவருகின்றான் தன் வயல் செழித்து வளர உதவிய அவனுக்கு நன்றி தெரிவித்து பொங்கி படைத்து பூசிக்கின்றான் உழவன். ஒரு பக்கத்தில் அவன் குடும்பம். அடுத்த பக்கத்தில் உதயனைப் போல் உறுதுணையாக இருந்த காளைமாடுகள்.

முதுபெரும் ஓவியர் 'விகே'யின் கற்பனை இங்கு கைவண்ணமாகி இருக்கிறது.

வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், ஆதரவாளர்கள் அபிமானிகள், அனைவருக்கும் உதயனின் பொங்கல் வாழ்த்துக்கள் உரியனவாகுக.

## 2-வது நாளாக

# பதற்றம்

## பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம், ஜன. 14

பருத்தித்துறை ஆயுதப்படையினரின் முகாமிலிருந்து நேற்றும் காலையிலிருந்து ஆயுதப்படையினர் சரமாரியாகச் சுட்டவண்ணம் இருந்தார்கள்.

இதனால் யாழ் அரசினர் வைத்தியசாலையில் இருவரும் - மந்திகை ஆஸ்பத்திரியில் மேலும் மூவரும் படு காயத்துடன் சேர்க்கப்பட்டார்கள்.

இதனால் பருத்தித்துறைப் பகுதியில் நேற்றும் பதற்றம் நிலவியது. சன நடமாட்டம் மிகவும் குறைந்திருந்தது.

முகாம்கள் இருக்கும் பகுதியில் வாகனங்கள், சன நடமாட்டம் எதுவும் இருக்கவில்லை.

பருத்தித்துறைச் சந்தையில் பொங்கலுக்கு வியாபாரம் செய்யவந்த வியாபாரிகள் மிகவும் குறைவாகக் காணப்பட்டனர்.

பொருள்களை வாங்கவந்தவர்கள் பீதியுடனும் பதற்றத்துடனும் அவற்றை வாங்கிச் சென்றார்கள்.

பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கு அருகாமையில் இருந்து சில வாகனங்கள் செயல்பட்டன. அப்பகுதியில் தற்காலிக சந்தையும் இயங்கியது. ஹெலிக்கொப்டர்கள் அடிக்கடி தாழப் பறந்து சென்றன.

பருத்தித்துறை முகாமுக்கு அருகில் உள்ள மக்கள் சிலர் பீதியுடன் குடிபெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றனர் என்று அறியப்படுகின்றது.

தொண்டமானாறிலும் நேற்று பதற்றம் நிலவியது.

# யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் கூடுதல்

## நிலப்பரப்பில் நெற்செய்கை

--உதயன் செய்தியாளர்: வி. வி. சுந்தரம்

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இம்முறை (1985-86 மகாபோகத்தில்) கூடுதல் நிலப்பரப்பில் நெல் செய்கை பண்ணப்பட உள்ளது. 10,817 ஹெக்டர் காணியில் நெல் செய்கை பண்ண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த மகா போகத்தைவிட இது ஐயாயிரம் ஹெக்டர் அதிகம் ஆகும். 18300 மெற்றிக் தொன் நெல் விளைச்சலை இப்போகத்தில் பெறலாம்.

மேற்கண்ட விவரங்கள் யாழ் செயலகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள விவசாய அபிவிருத்தி செயற்படு திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சாவகச்சேரி, நல்லூர், தொல்புரம், புலோலி, கீரிமலை, உடுவில், புத்தூர், அம்பன், வேலணை, கைதடி, புங்குடுதீவு, நீர்வேலி ஆகிய பன்னிரண்டு கமநலசேவைப் பிரிவுகளில் இச்செயற்படு திட்டம் அமுலாக்கப்பட உள்ளது.

யாழ் மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் இவ்வருடம் தீர்த்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபோன்ற பல நடவடிக்கைகள் வடபகுதி விவசாயிகள் இதுவரை முகம் கொடுத்த பல பிரச்சினைகளைக் குறைக்க வழிசெய்யும் என்று காணிப்பகுதிக்கு பொறுப்பான உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பி. பாலசிங்கம் உதயனிடம் நம்பிக்கை தெரிவித்தார்.

### வாசகர் கவனத்துக்கு...

இன்று தைப்பொங்கல். உதயன் அலுவலர்கட்கு விடுமுறை அதனால் உதயன் நாளை புதன்கிழமை (15-1-1986) மட்டும் வெளிவரமாட்டான்.

– ஆசிரியர்

### தொண்டாவை சுகம் விசாரித்தனர்

கொழும்பு, ஜன. 14

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் அமைச்சர் திரு. தொண்டமானை பல பிரமுகர்கள் தனியார் ஆஸ்பத்திரிக்குச் சென்று சுகம் விசாரித்தனர்.

### சுபநேரம்

14 - 1 - 86
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்
11.04 முதல் 12.34வரை
ராகுகாலம்
3 34 முதல் 5.04 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
தமிழர் தைப்பொங்கல் திருநாள்

## பிரஜைகள் குழு தலைவர் கைது

கொழும்பு, ஜன. 14

திருக்கோயில் தம்பிலுவில் பிரஜைகள் குழுத் தலைவர் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் வீரசிங்கம் மேகராஜா தம்பிலுவிலைச் சேர்ந்தவர்.

இவர் கைதாவதற்கு முதல் நாள் இப்பகுதியில் இருந்து ஆயுதப்படையினர் ஒருவரைக் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

இதனை அடுத்தே பிரஜைகள் குழுத்தலைவரும் அழைத்துச் செல்லப்பட்டார்.

இதற்கிடையில் செங்கலடியில் அதிரடிப்படையினர் நேற்று பலத்த தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்த சம்பவத்தில் 60 பேர் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

## புதிய இணைப்பு அதிகாரி சிவில் அதிகாரிகளை

### வியாழன் சந்திக்கிறார்

யாழ்ப்பாணம் ஜன. 14

வடபகுதி இணைப்பு அதிகாரி பிரிகேடியர் எச். எஸ். ரூபசிங்கா வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குச் சிவில் அதிகாரிகளைச் சந்திக்கிறார்.

யாழ் மாவட்ட அரச திணைக்களத் தலைவர்கள், வங்கி முகாமையாளர்கள் ஆகியோரைக் கோட்டை இராணுவ முகாமில் அவர் சந்திக்கிறார்.

இது சம்பந்தமான அழைப்பு நேற்று அனுப்பப்பட்டது.

புதிதாக இணைப்பு அதிகாரியாகப் பதவி ஏற்ற பிரிகேடியர் ரூபசிங்கா, யாழ் மாவட்ட அரச திணைக்களத் தலைவர்களைச் சந்திப்பது இதுவே முதல் தடவையாகும்.

## பிரார்த்தனை இயக்கம் இன்று நடக்கிறது

(பிந்திய செய்தி)

கொழும்பு, ஜன. 14

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரார்த்தனை இயக்கம் திட்டமிட்டபடி இன்று தைப்பொங்கல் தினத்தன்று நடக்கும்.

நாளை தொடக்கம் தொடர்ந்து பிரார்த்தனை இயக்கம் நடைபெறுமா? என்பது, இன்று அமைச்சர் தொண்டமானும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் நடத்தும் பேச்சுக்களின் முடிவுகளில் தங்கியுள்ளது.

தோட்டத் தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து திரு. தொண்டமானும் திரு. ஜெயவர்த்தனவும் இன்று பேச்சுக்கள் நடத்துவர்.

முக்கிய முடிவுகள் இச்சந்திப்பின்போது எடுக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

## கருணாநிதியின் பொங்கல் சபதம்

சென்னை, ஜன. 13

இலங்கைத் தமிழினத்தைக் காத்திடக் கிளம்புவோம்! எதிர்வரும் இன்னல்கள் அனைத்தையும் எதிர்ப்போம்!!

இதுவே பொங்கல் திருநாளில் தமிழர் எடுக்கும் சபதமாக அமைய வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி விடுத்த பொங்கல் செய்தியில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

## காத்தான்குடியில் நேற்றுக் குழப்ப நிலை

— மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் —

மட்டக்களப்பு, ஜன. 14

காத்தான்குடியில் நேற்று பதற்றம் நிலவியது. மினி ஸ், அரச பஸ்களில் சென்ற தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர்.

காத்தான்குடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நேற்று இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தைத் தொடர்ந்தே தாக்குதல்கள் இடம்பெற்றன.

பஸ் ஒன்று வழிமறிக்கப்பட்டு தமிழ்ப் பயணிகள் தாக்கப்பட்டனர். சின்னத்தங்கம் என்ற 60 வயது பெண் காயங்களுடன் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

20 தமிழர் வரை, ஆரையம்பதி ஆஸ்பத்திரியிலும் தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்று வீடு சென்றனர்.

நிறுத்தாமல் சென்ற பஸ்கள் மீது கற்கள் வீசப்பட்டன.

இதன் காரணமாக பஸ் சேவைகள் ஸ்தம்பித்தன. காத்தான்குடி தபால் நிலையம் மூடப்பட்டது.

### சமாதான முயற்சியில் மதபிரமுகர்கள்

மட்டக்களப்பு, ஜன.14

பதற்றம் ஏற்பட்டுள்ள காத்தான்குடியில் நேற்று சமரசமுயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

மதப்பிரமுகர்கள் சிலர் இரு சமூகத்தவர்களையும் ஒற்றுமைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

பொலீஸ் ரோந்து அதிகரிக்கப்பட்டிருந்தது.

அரசாங்க ஊழியர்கள் பலர் பாதுகாப்புக் கருதி நேற்று நகரிலேயே தங்கினார்கள்.

Bata

SHOW ROOM

19, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் உளம் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

நவீன மோஸ்தர்கள் தற்பொழுது விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன

பெண்களுக்கான பாதாணிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ROSY | 19 | — | ரூபா | 149.90 | சதம் |
| NANDA | 46 | — | " | 89.90 | " |
| RAMANI | 02 | — | " | 149.90 | " |
| SRIYANI | 91 | — | " | 149.90 | " |

மற்றும் ஆண்கள், சிறுவர்கள் ஆகியோருக்கும் புதிய மோஸ்தர்களில் பாதணிகள் விற்பனையில் உள்ளன.

• தரத்தின் சின்னம் பாட்டா!
விரையுங்கள்!! முந்துங்கள்!!!

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீதன ஒழிப்பில் ராதிகா தீவிரம்

தினசரி சினிமா

சீதன ஒழிப்பு, விதவை மறுமணம் - இவற்றை ஆதரிப்பதில் வெகு தீவிரமாக இருக்கிறார் ராதிகா. பத்திரிகைகளுக்கு பேட்டி அளிக்கும் போதும் கூட இதை அடிக்கடி நினைவுபடுத்துகிறார் ராதிகா.

சீதன ஒழிப்பில், தமது சிநேகிதிகளுக்கு ஆலோசனை கூறுவதிலும் ஈடுபட்டிருக்கிறார் அவர்.

அண்மையில் ராதிகா, இவ் விஷயத்தில் சிநேகிதி ஒருத்திக்கு உதவியும் செய்திருக்கிறார். அந்தச் சம்பவத்தை அவரே சொல்கிறார்.

''எனது நெருங்கிய, உயிருக்குயிரான சிநேகிதி அழகி என்றால் அழகி தான். படிப்பிலும் குறைவில்லை. அவளுக்கு திருமணத்திற்கான ஏற்பாடுகள் நடந்தன.

மாப்பிள்ளைப் பையனும் நல்ல அழகன் தான். பி. காம். பட்டதாரி. அவனும் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்துவிட்டான்.

ஆனால், திருமணத்திற்கு அவன் விதித்த நிபந்தனைகள் என்ன தெரியுமா? பணம் ரூபா மூன்று லட்சமும், ஒரு ஸ்கூட்டரும் தான் அவை.

என்னிடம் ஆலோசனை கேட்க ஓடோடி வந்தாள் சிநேகிதி. நான் விடுப்பவளு என்ன?

அவன் உன் குணத்தையோ, அழகையோ விரும்பவில்லை. பணம் தான் அவனுக்கு முக்கியம். அதுதான் அவனது குறிக்கோள். அப்படிப்பட்ட ஒருவனை கைப்பிடித்துக் கஷ்டப்படாதே என்று எச்சரித்தேன்.

விஷயம் புரிந்த என் சிநேகிதி பட்டதாரி மாப்பிள்ளையைத் தூக்கியெறிந்து விட்டாள்.

அது மட்டுமல்ல, இந்த எச்சரிக்கையை எனது சகோதரிகளுக்கும் தெரிவித்து உள்ளேன்'' என்றார்.

### ரதியின் தந்திரம்

தொலைபேசியில் அடிக்கடி தொல்லை கொடுப்பவர்களுக்கு நடிகை ரதி இப்படி ஒரு ''கயிற்றை''க் கொடுப்பார்.

''என்ன சொல்றீங்க? காதில விழலியே? இந்த போன் ரொம்ப மோசம் . . . என்னது ஒண்ணுமே கேட்கலீங்க . . . . என்று சொல்லிக் கொண்டிருப்பார்.

ஐரோப்பிய நாடுகளில்

# பயங்கரவாதிகள் தாக்குதல் திட்டம்

## அமெரிக்க, இஸ்ரவேல் அலுவலகங்கள் மீது

ரோம், ஜன. 13

ஐரோப்பிய நாடுகளில் உள்ள அமெரிக்க, இஸ்ரவேல் அலுவலகங்கள் மற்றும் ... ஸ்தாபனங்களை அரபு பயங்கரவாதிகள் மீண்டும் தாக்கத் திட்டமிட்டுள்ளார்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தி உள்ளன.

ஹொலந்து, ஸ்பெயின் நாடுகளில் உள்ள அமெரிக்க, இஸ்ரவேல் நிறுவனங்கள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தத் திட்டம் இட்டிருப்பதாக டச்சு அரசு அறிவித்துள்ளது.

இந்த நாடுகளில் உள்ள அமெரிக்க, இஸ்ரவேல் தூதரகங்கள், நிறுவனங்களுக்கு டச்சு அரசு பாதுகாப்பு வழங்கியுள்ளது.

## இந்து சமுத்திரத்தில் அமெரிக்கா உஷார்

### ஈரானின் நடவடிக்கை காரணம்

வாஷிங்டன், ஜன. 13

இந்து சமுத்திரத்தில் நிலை கொண்டுள்ள யுத்தக் கப்பல்களை உஷார் நிலையில் இருக்கும்படி அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு உத்தரவுவிட்டுள்ளது.

வளைகுடாவில் சென்று கொண்டிருந்த அமெரிக்க சரக்குக் கப்பல் ஒன்றை ஈரானியக் கடற்படை வீரர்கள் நடுக்கடலில் மறித்துச் சோதனை இட்டதைத் தொடர்ந்தே, அமெரிக்க அரசு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள யுத்தக் கப்பல்களை வளைகுடா கடலுக்குச் செல்லும்படி உத்தரவிடப்பட்டுள்ளதா என்பது பற்றித் தகவல் வெளியிட அமெரிக்கப் பாதுகாப்பு பிரிவு மறுத்து விட்டது.

அமெரிக்க சரக்குக் கப்பல் ஒன்று நடுக்கடலில் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்ட சம்பவத்தை மிகப் பாரதூரமானதாக அமெரிக்கா கருதுகின்றது.

இப்படி அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

# வெளி உலகில்

## மன்னிப்புச் சபை உறுப்பினர் குழுவை டோகோ வெளியேற்றியது

லண்டன், ஜன, 10

சர்வதேச மன்னிப்புச் சபையின் மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழுவை, டோகோ நாடு வெளியேற்றியது.

அரசியல் கைதிகளை சித்திரவதை செய்வது சம்பந்தமாக ஆராயவே இக்குழு டோகோ சென்றது.

டோகோவின் தலைநகரான லோம் என்ற இடத்தை இக்குழு அடைந்ததும் டோகோ அரசு வெளியேற்ற உத்தரவைப் பிறப்பித்தது.

சில அரசியல் கைதிகள் சித்திரவதை காரணமாக இறந்துள்ளனர் என்று மன்னிப்புச் சபை தெரிவித்தது.

## கைதி கொலை 14பேர் காயம்

இன்டியானா, ஜன. 13

அமெரிக்க மாநிலமான இன்டியானாவில் உள்ள சிறை ஒன்றில் கைதிகளுக்குள் ஏற்பட்ட மோதலில் ஒரு கைதி கொல்லப்பட்டார். 14 பேர் காயமடைந்தனர்.

இச் சிறைச்சாலையில் 1,600 கைதிகள் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

## இன்ஸ்பெக்டர்கள் மீது தாக்குதல் நடத்திய பொலீஸ் கோஷ்டி

### கோயம்புத்தூரில் சம்பவம்

மதுரை, ஜன 13

ஆயுதந் தாங்கிய ரிஸர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் கோஷ்டி ஒன்று மேலதிகாரிகளான இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் ஆகியோரைத் தாக்கியதாம்

இச்சம்பவம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள கோவைப்புத்தூர் என்னும் இடத்தில் நடந்தது.

ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக வேதனை அடைந்த கான்ஸ்டபிள் ஒருவர் கிணற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டதன் எதிரொலியாகவே இச்சம்பவம் இடம்பெற்றது.

இதுசம்பந்தமாக 4 பொலீஸ் கான்ஸ்டபிள்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

## மயிலாப்பூரில் வள்ளுவர் சங்கம்

சென்னை, ஜன 13

திருவள்ளுவர் பிறந்த மயிலாப்பூரில், வள்ளுவர் சங்கம் ஒன்று கடந்த ஞாயிறு ஆரம்பித்து வைக்கப்பட்டது

வள்ளுவர் ஆலயத்தில் இந்த வைபவம் நடந்தது.

நீதிபதி திரு. எஸ். மோகன் அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில், திருக்குறள் காட்டும் அறநெறிகளை உலகெங்கும் பரப்பும் முயற்சிகளில் வள்ளுவர் சங்கம் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அன்பர்கள், பாவனையாளர்கள் அனைவருக்கும் எமது

பொங்கல் நல் வாழ்த்துக்கள்

SRI RAMS TEXTILES PROCESSING CO. LTD.,

KONDAVIL ROAD, IRUPALAI - KOPAY.

Telephone: 24087 Grams: SRIRAMS (KOPAY)

மின் பாவனையாளர்கள், வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும்

எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

மின்சார, மின் அலைகளை உங்கள் கட்டுப்பாட்டினுள் நெறிப்படுத்துங்கள்

TENBY

ரென்பி சுவிட்ச் வகைகள் நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலையில் விற்பனையாகின்றது.

S-Lon

பைப்புகள் அதற்கான சகல அமைப்புகளும் நெளிவுகளும் பொருத்துகளும் தட்டுப்பாடு இன்றி தாராளமாக விற்பனை செய்யப்படுகின்றது.

அலங்கார மின் விளக்குகள்

தென்றல் வீசிடும் மின் விசிறிகள்

மின் அடுப்புகள்

மின் ஒளி பரப்பிடும்

சகல மின் குமிழ்கள்

விவசாயத் தோழன்

நீர் இறைக்கும் இயந்திரம்

இக்கால தேவை எதுவோ அதுவே எமது விற்பனைச் சேவை

SUNDHARSON

MARKET VIEW, MANIPAY.

Dealers in Electrical Accessories.

சுந்தர்ஸன் உங்கள் உத்தரவாதம்! சுந்தர்ஸன் சிறப்புமிகு சேவை!

சுந்தர்ஸன்

மத்திய சந்தை, மானிப்பாய்.

லிங்கா எலெக்ரிக்கல்ஸ்:

4 அடி 2 அடி ரியூப்லைற் செற்றுகளும் வட்ட ரியூப்லைற்றுகளும் மொத்தமாகவும சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைப் ★ பொங்கல் ★

### வீரியமாய் போராடுவோம்!

போராடி நிமிர்ந் தவர்க்குப்
புதுப் பொங்கல் வருகிறது.
நீராடி உடையுடுத்தி
நினைவெல்லாம் பணமுடுத்திச்
சீராடிக் களிக் கின்ற
''சிறப்பான மனிதர்காள்!''
வேராடி விழுந் தாலும்,
வீரியமாய்ப் போராடும்

✶ ✶ ✶

பொங்கி வரப் பானையிலே,
போட்டுவிடு புரட்சியினை!
தங்கி வருந் துயரெல்லாந்
தலை மூழ்கிப் போகட்டும்;
இங்கிதமே தெரி யாத
இன வெறியர் தீவிலுனைச்
சங்கிலியால் விலங்கு காக்குஞ்
சரித்திரமே மாறட்டும்.

✶ ✶ ✶

அன்றிருந்து பெற்ற தெலாம்
அனலாகிக் கொதிப்பதனால்
இன்று வரும் பொங்கலிலே
''இதயங்கள் பொங்குவதை''
நன்றிருந்து காட்டுகின்ற
நம்பிக்கைக் கீற்றுகளே!
தின்று வரும் முதலைகளைத்
தீயிட்டுப் பொங்குங்கள்!

✶ ✶ ✶

மலைநாட்டுப் பாட்டாளி
மதிப்புயருங் கூட்டாளி
நிலை பார்த்துக் கலங்குவதால்
நினைவெல்லாங் குலுங்குவதால்
கலை வளர்த்த தமிழ் மாதின்
கவிஞன் யான்; கவிதைச்
சிலை வடித்து வாழ்த்துகிறேன்;
சிறப்பாக அவர் வாழ!

- கவிஞர். இளங்கம்ப பாரதி -

### உள்ளம் பொங்குக! உவகை பொங்குக!

எங்குமே இன்பம் எழிலாய் மலர
ஏற்ற நல் வாழ்வு இதமாய் வளர
தங்கமே என்று தரணியோர் வாழ்த்த
தை மகள் வந்தாள் தவமே ஆயற்றி
பங்கமே நீக்கிப் பாரெல்லாம் போற்ற
பச்சரிசி யிட்டுப் பானையது தனிலே
பொங்கலோ பொங்கல் எனும் பொலிவுடனே
பூவுலகந்தன்னில் புதுமைகள் பொங்குக !

வந்தித்தே நின்று வணங்கினோம் உன்னை
வளமான வாழ்வு நமக்கருள் ஐயா !
சிந்தித்தே நிதம் சிரந்தாழ்த்தி எமது
கரமது குவித்தோம் இரவியே வருக!
பந்திக்கே முந்தும் பழக்கத்தினால் நாம்
பாழாய்ப் போகாது பரிதியே காப்பாய்
உந்திக் கமலத்தே 'உதயனை' வைத்தோம்
உள்ளமும் பொங்குக! உவகையும் பொங்குக !!

— இ. ஸ்ரீதரன் —

### உய்கவே உலகமெல்லாம்

உதயனின் உதயத்தாலே
உய்கவே உலகமெல்லாம்
சிதைவுற்று சீரழிந்தநாடு
சீர்பெற்று மலரட்டும்
பதைபதைப்பும் பரபரப்பும் நீங்கிட
பாங்கான செய்திதந்திடு
இதயத்தைக் கொள்ளைகொள்ளும்
இளஞாயிறென எழுந்துவா.

-- சி. சபாநாதன் —

### நன்றிப் படையல்

ஓ! இன்று -
தைப்பொங்கல்
கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு
எனும் மூன்றிணைந்த அடுப்பினிலே
தியாக மதாம் தீயினிலே
தன்மானப் பானை வைத்து
உணர்வாம் நீர் சேர்த்து
உண்மையாம் பால் பொங்க
பச்சரிசி பயறுடனே
சர்க்கரையும் சேர்த்து அரும்
ஐக்கியமாம் அமுதாக்கி
உழவன் மனங்குளிர்ந்து
சூரியத் தலைவனுக்கே
நன்றிப் படையல் தரும்
நானிலத்தின் திருநாள் இது!

—நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்—

### தொடர் கதை

ஒவ்வொரு நாளும் உதிக்கின்ற
பால் வடியும் உதயனின் முகத்திற்கு
உழுதவர்கள் உழைத்தவர்கள்
நெற்றெடுத்த நெல் மணிகளினை
பானையிலே போட்டுப் பொங்கி
தை பிறக்கும் நாளதிலே
தவறாமல் பொங்கல் படைத்தோம்...
தொடர்கதையாய் இங்கு இதுநிகழும்.

— கோவை புலேந்திரராஜ் —

### அச்சமின்றிபொங்கிடுவோம்!

அழகழகாய் பாத்திகட்டி
அரும்பயிர்க்கு நீரூற்றி
உழவனவன் உழைத்தாங்கே
உரிமையுடன் கொண்டவிழா.

தரணிபுகழ் தமிழரெலாம்
தம்முடனே கொண்டவிழா
பாரினிலே சிறந்தவிழா
பண்பிலுயர் பொங்கல் விழா

பச்சரிசிப் பொங்கலிட்டு
பாலுடனே பருப்புமிட்டு
அச்சமின்றிப் பொங்கிடவே;
ஆதவனே அருள்புரிவாய்!

— வண்ணை சேது. சிவராஜா —

# ஞாயிற்றைப் போற்றுவோம்

## உலக இயக்க காரணன் உள்ளிருள் நீக்கும் ஞானபாநு

''ஞாயிற்றைத் துதிப்போம் வாருங்கள்'' எனப் பாரதியார் எல்லாரையும் அழைக்கின்றார். ஞாயிறு சூரியனைக் குறிக்கும் சொல். சூரியனைக் கண்கண்ட தெய்வமாக வேதங்களும் உபநிஷத்துகளும் போற்றுகின்றன.

''பலகோடி கிரணமுள்ளவர், ஒளிவடிவானவர். மங்களத்தைச் செய்பவர். சிவன், விஷ்ணு, பிரமா ஆகிய மும்மூர்த்தி-யின் வடிவாயுள்ளவர், மூவுலகிற்கும் சூடாமணி போன்றவர், கோரிய பலனைத் தருபவர் இவ்வாறு பெருமைக்குரிய சூரியனைத் துதிப்போம்'' என வடமொழித் தோத்திரம் கூறுகிறது.

தைப்பொங்கற்தினம், சூரியனைப் போற்ற ஏற்ற தினம். அன்று அவர் வடதிசையை நோக்கிப் பிரயாணம் செய்ய ஆரம்பிக்கிறார். இது உத்தராயணகால ஆரம்பமாகும். உத்தராயணத்திலே நற்கருமங்கள் செய்யப்படுகின்றன. தேவர்கட்கெல்லாம் இது பகற்காலமென்பர்.

மழைகாலம் முடியத் தைப்பொங்கல் வருகிறது. மழைகாலத்திலே விளைந்த பிரதான விளை பொருளாகிய நெற்பயிரின் பயனை நாம் அடையும் காலம் இது. சூரியனாலே காலம் கணக்கிடப்படுகிறது. பாரதியார் கூறுகிறார்:- ''மழையும் நின் மகள் மண்ணும் நின்மகள் காற்றும், கனலும், கடலும், நின் மக்கள்'' எனவே மழை பெய்வதற்கும் விளைச்சலுக்கும் காரணமாகிய சூரியனைப் போற்ற, விளைச்சலில் முதற்பயனைத் தெய்வார்ப்பணம் செய்வதுபோல பொங்கலிட்டுப் போற்றி மகிழ்கிறோம்.

சூரியனை வணங்கிப் பலன் பெற்றவர்கள் பலரெனப் புராணங்கள் கூறும். இராமர் சீதையைப் பிரிந்து சோகத்துடன் இருந்த சமயம் அவர் சோகம் நீங்கவும் வேகத்துடன் போர் செய்யவும் சூரிய மந்திரம் உதவியதென்பர்.

கண்ணில் நோயுள்ளவர் சூரியன் உதிக்கும் போது செம்மலரிட்டு வழிபாடு செய்தால் கண்நோய் நீங்கிவிடும். சூரி

**- வ. குகசர்மா -**

யன் இருட்டை அகற்றுவது போல எனது கண்நோயைப் போக்கட்டும், அதைப்போல சகலநோய்களையும் போக்கட்டும். புத்தியில் உள்ள குற்றங்களையும் நீக்கட்டும்'' என்பது ஓர் அடியாரின் வேண்டுதல்.

சூரியனை மும்மூர்த்திகளாக மட்டுமல்ல, நாம் வணங்கும் எல்லாத் தெய்வங்களாகவும் போற்றலாம். ''சக்தி உதயத்திலே தோற்றும் ஆயிரகோடி சூரியர்களின் பிரகாசமுடையவர்'' என லலிதா கோத்திரம் கூறுகிறது. சூரிய மண்டல மத்தியிலிருப்பவராகவும் சக்தி கூறப்படுகிறார் ''சக்திவெள்ளத்திலே ஞாயிறு ஒரு மலர்'' என்கிறார் பாரதியார்.

உதயசூரியனை முருகனைக் கண்டார் நக்கீரர். கடலின் மேல் தோன்றும் சூரியன் நீலமயில் மேற்தோன்றும் நின்மலனைக் காட்சியளிக்கிறான் குன்றின் மேல் தோன்றும் கதிர், குமரவேள் மேனியை ஞாபகம் ஊட்டுகிறது.

சூரியன் தாமரைப்பூவை மலரச் செய்கிறது. ஞான சூரியன் உள்ளத்தாமரையில் உணர்வை அளிக்கிறான். புறவிருளை நீக்கும் சூரியன் உள்ளிருளை நீக்கும் ஞானபாநு ஆகிறான். உள்ளத்திலே சூரியனை உபாசிப்பதாலே உயர்வடைந்தனர் பெரியோர். ''கீவலை, சிறுமை, வறுமை, துன்பம், நோய், இவையெல்லாம் இருளின் பேய்கள்'' என்று கூறினார் பாரதியார்.

திருவளர் வாழ்க்கை கீர்த்தி, தீரம், நல்லறிவு, இன்பம், பல கலைகள் இவையெல்லாம் வருவது ஞானத்தாலேயாகும். ஆகையால் பெருமையுடைய ஞானபாநு இதயத்தில் உதிக்க வேண்டும். நாம் வெம்மையைப் புகழ்கிறோம். அந்தத் தெய்வமே ஞாயிறு.

அமுதமே மெய்யொளி அமுதமே உயிர். ஒளிக்கு இடமாகிய ஞாயிற்றை என்றும் மறக்காமல் போற்றவேண்டும். அந்த ஒளியை உள்ளிருத்த வேண்டும்.

ஞாயிற்றைப் போற்றுதல் நன்று. ஞாயிற்றின் புகழ் பேசுதல் நன்று.

### பொங்கற்பானை



பிருதிவி, அப்பு,தேயு வாயுவோ டாகாசம்நற்
கருவிலே யிணைந்தபானை உடலெனப் படுவதாகும்
வருமுயிர் பொருந்திநின்று உடலினுள் அரிசியாகி
இருவினை நன்மைதீமை பொங்கிடும் வாழ்க்கை
தன்னில்

ஐம்பெரும் பூதத்தாலே ஆக்கிய மண்ணின்பானை
தீம்பசும் பாலினோடு சர்க்கரை, அரிசி,நீரும்
பாம்புட னுடும்நாதன் படைத்துக்காத்
தெமக்குநல்க
நாம்பல வாறுய்ப்பொங்கி யுறுகிறோம்
அவதியென்று

நாரிய ரோடுநண்ணும் ஆடவர் தாமுங்கூடிப்
பேரிருள் கலையுங்காலை கருதியே விழித்தெழுந்து
மார்கழி நீரிலாடி வாசலிற் கோலமிட்டுப்
பாரினுக் கொளியாய்ப்பொங்கும் பாஸ்கரன்
வரவைநோக்கிச்

செய்கையிற் சொல்லில் நெஞ்சில் தீயவை
பொங்காவண்ணம்
பொய்யுடன் வஞ்சம்,சூது, பகையது வெந்து
தீயில்
மெய்யதாய்ச் சாம்பராகி வெறுமையாய்
நிற்கும்போதே
கையினை வீசித் தையும் மெல்லெனச்
சிரித்துநிற்கும்

நிறைகுடம் தூபதீபம் தூய்மையாய்
ஏற்றிவைத்துப்
பொறுமையாய்ப் பொங்கற்சாதம் பழத்துடன்
வாயிலூட்டிச்
சிறியர் பெரியரென்றே பேதமும் போக்கியாங்கு
நறுமணப் பொங்கல் கண்டால் நற்பொங்கல்
தானேவாழ்வு.

—ந வாலியூர் நா. சச்சிதானந்தன் —

# தமிழரின் தொன்மைமிகு பண்பாட்டுத் திருநாள் பட்டிப் பொங்கல்



''அ'' கர உயிர்போல் எங்கும்நீக்கம் அறநிறைந்திருக்கும் கடவுள் பற்றிய தியானம், ஆதவனுக்குப் பூஜையும் பொங்கலும் செய்து நன்றிக்கடன் செலுத்தும் பண்பு, ஆவினத்தையும் பேணிக்காக்



கும் மரபு, சூரிய பகவானின் உத்தர - அயனம் எனப்படும் வடதிசைச் செலவு, வானவர்க்கு விடியற்காலமாக அமையும் சிறப்பு-இவை யாவும் ஒருங்கே அமையப் பெற்ற புனித தினங்கள் தைப்பொங்கலும் அதனை அடுத்த நாள் வரும் பட்டிப் பொங்கலும் ஆகும்.

தமிழ் நாட்டில் கன்றுகளுக்குத் தனியாக விழா எடுக்கும் ''கன்றுப் பொங்கல்'' பண்டிகை தைப்பொங்கல், பட்டிப் பொங்கல் ஆகியவற்றை அடுத்த மூன்றும் நாள் கொண்டாடப்படும். இலங்கையில் தைப் பொங்கல், பட்டிப்பொங்கல் ஆகிய இரு பண்டிகைகளுமே சிறப்பாகக் கொண்டாடப்படுவன.

தமிழரின் பண்டைய பண்பாட்டுச் சின்னங்கள், சான்றுகள் எங்கெல்லாம் கிடைக்கப்பெறுகின்றனவோ அங்கெல்லாம் ஆவினம் பூஜைக்குரியவாகப் போற்றப்படுதலைக் காணலாம். சுமேரிய நாகரிகம் திகழ்ந்த குமரிக் கண்டப் பண்பாட்டில் பசுபதிநாதர், பசுக்கூட்டங்கள் மத்தியில் வைத்துப் பூசிக்கப்பட்டதாகச் சான்றுகள் உள. இந்து வெளி நாகரிகத்தில் எருதும் பசுவும்பண்பாட்டின் உயர் கூறுகளாகக் கணிக்கப்பட்டதைக் காணலாம்.

சங்க இலக்கியம் சித்திரித்துக் காட்டும் தமிழர் சால்புகூறும் புறநானூற்றுப் பாடலில்:

''ஆவும் ஆனியற் பார்ப்பன மக்களும்
பெண்டிரும்
பிணியுடையிரும்''

போர்த்தருமத்தில் கொல்லப்படாத அறநெறிப்பட்ட வாழ்க்கை காணப்படுகின்றது.

திருமுறைகளில் அடங்கிய திருமந்திரம் பசுவின் சிறப்பினைக்கூறும் தலை சிறந்த நூல்.

பசுவுக்கோர் வாயுறை கொடுத்து யாவரும் புண்ணியத்தைத் தேடிக் கொள்ள வழிகாட்டியவர் திருமூலப்பிரான்.

கொல்லாமை என்பது நம் திருமுறை கூறும் தலையாய சீலம் என்பதையும் பசு ஓம்பல் அது கூறும் அறன் என்பதையும் நினைவுபடுத்தி இதனை அன்றுட நடை முறையில் செயல்படுத்தும் பண்டிகை பட்டிப்பொங்கல் ஆகும். சைவத்திற்குப் புத்துயிர் தந்த ஞானத்தின் திருவுரு நான்மறையின் தனித் துணையாம் ஞானப்பாலுண்ட சம்பந்தப்பெருமான் சைவத்தின் உயிர் நாடியாகிய ஆனினத்தைத் தம் திருப்பாசுரத்தில் வாழ்த்தியமை உய்த்துணரற்பாலது.

சைவ வழிபாட்டில் அர்ச்சனைக்கும் வேள்விக்கும் வேண்டிய பஞ்ச கௌவியங்களைத் தந்து தவி உலகம் இன்புறச் செய்வன பசுக்கள்.

பால், தயிர், நெய், கோசலம், காமயம் என்பன அரன் தமக்கு அபிஷேகம் செய்தற்கு இன்றியமையாத பூஜைத் திரவியங்கள்.

பசு தாமே சென்று நேரடியாகப் பால் சொரிந்து சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யும் காட்சியைச் சித்திரிக்கும் சிற்பம் கொழும்பு பொன்னம்பலவாணேசுவரர் ஆலயத்தில் மண்டபத் தூணொன்றில் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. உமாதேவியார் பசுவாக வந்து நம்பெருமானைப் பூசித்த இடம் திரு - ஆ- அடு-துறை ஆகும்.

விசய மங்கை எனும் திருத்தலத்தில் கோக்குலம் வழிபாடு செய்வதைச் சம்பந்தப் பெருமானின் தேவாரம் கூறும்.

தென்திரு நின்றியூர் சிவனைப் பால்சொரிந்து பசுக்கள் பூசித்த வரலாற்றைச் சுந்தரர் தேவாரத்தில் காணலாம்.

பண்டைத் தமிழர் பண்பாட்டினை நன்குணர்ந்த பாரதி பிஞ்சுப் பாப்பாக்களுக்குப் பாடிய பாப்பாப்பாட்டில்:

பசு ஓம்பலையும் பாலின் மகத்துவத்தையும் தமக்கேயுரியதான புதிய பாங்கில் கூறியதையும் பட்டிப் பொங்கல் கொண்டாடும் நாம் உணர்தல் வேண்டும். பாலைப் பொழிந்து தரும் மிக நல்ல பசுவைப் போற்றுதல், பட்டிப் பொங்கல் செய்தல், கோபூஜை செய்தல் ஆதியன பாரதியின் அபிலாஷையைப் பூர்த்தி செய்யும் கைங்கரியமாகும்.

பட்டிப் பொங்கல் திருநாளில் பசுவதைப் பாவத்திற்கு அஞ்சித் தேசாந்தரம் சென்று சிதம்பரத்தில் மடமும் குளமும் அமைத்து வாழ்ந்த போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்து ஞானப்பிரகாச முனிவரை நினைவு கொள்ளாமல் இருக்க முடியாது. ஈழத்துச் சிதம்பர புராணத்தில் 'ஆடு கதறியது' அரிய கவிதை தந்த நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகனார் புலவர் சோ. இளமுருகனார் ஞானப்பிரகாச முனிவரைக் குறிப்பிடுமிடத்துக்.

கையர்கள் இந்நிலம்
ஆண்ட காலத்துத்
தெய்வ நல்லாக்களைச்
செகுக்க வேண்டினர்
ஐயோ அறிவொளி
முனிவன் அஞ்சியே
மெய்ந்நெறித் தமிழகம்
மேவி வாழ்ந்தனர்

என்று பாடியுள்ளனர். ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள் இயற்றிய ஈழமண்டல சதகத்திலும் ஞானப்பிரகாச சுவாமிகள் வரலாறு கூறும் பாடல்கள் உண்டு. பட்டிப் பொங்கல் போன்ற பசு சார்ந்த பண்டிகைத் தினத்தன்று ஞானப்பிரகாச முனிவர் போன்றோரது அருஞ்செயல்களைப் போற்றிப் பலரும் அறியச் செய்தல் புண்ணிய கருமமாகும்.

நாவலர் பெருமான் அருளிய பெரியபுராண சூசனத்தில் 'மனுநீதி' 'பசு ஓம்பல்' எனும் பகுதிகள் பசுமேய்த்தலாகிய உத்தம புண்ணியத்தால் மிகச் சிறப்புற்ற சண்டேசுர நாயனார் வரலாறு ஆகியன சைவர்கள் ஆகிய எது பண்பாட்டுப் பொக்கிஷங்கள்.

**-- வே. ந. சிவராசா- -**


எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இதயங் கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக!




MAYURA CENTRE
13-B, MODEL MARKET, JAFFNA.
T'Phone: 7556

பொங்கல் வாழ்த்துக்கள்
வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள் அனைவருக்கும் உரித்தாகுக!
சீமாட்டி Seemati
சீமாட்டி
யாழ்ப்பாணம்.
Fancy Goods
MODEL MARKET, JAFFNA.
சீமாட்டி
புதிய சந்தை, சுன்னாகம்.
சீமாட்டி FARMS

பொங்கல்
நல் வாழ்த்துக்கள்
கே.கே.வி.
யாழ்ப்பாணம் நகை மாளிகை
K.K.V. JAFFNA JEWEL HOUSE
82|4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 22362


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1986 உதயன் 1986

# வருட வழிகாட்டி

### அக்ஷய வருஷ பலன்

இவ்வருஷம் மழை சமம், காற்று அதிகம். நெல், பயறு, உழுந்து, கேழ் வரகு விளைச்சல் அதிகம். மிளகாய், புகையிலை, இரும்பு விலை யேற்றம். போர்க் கருவிகள், ஆயுதங்கள் அதிகம் அக்கினி, ஆயுத, விஷபயம், கர்ப்பிணிகளின் கர்ப்பம், குழந்தைப்பேறு சுகம். குழந்தைகள் நோயின்மை உண்டு. பயம், இரத்தக் காயம், ரணம், சத்திரசிகிச்சை அதிகரிப்பு. எனினும் வருடப் பிற்பகுதியில் குறையும். அந்நிய நாட்டுத் தொடர்புகள் சீர்குலையும். பணப் பெறுமதி குறையும். பணவீக்கம் அதிகரிக்கும். அரசியலில் மாறுதல் ஏற்படும். உட்பூசல்கள் அதிகரிக்கும். தேயிலையின் வியாபாரச் சந்தை இறங்கும். தெங்குப் பொருள் விலை சமம். அந்நிய நாடுகளின் உதவியில் இலங்கை அதிகம் தங்கியிருக்கும். பயிர்களை அழிக்கும் பூச்சிகளால் கெடுதி, தொழிலாளர் கிளர்ச்சி, இலங்கையின் அரச உயர் பதவிக்குப் போட்டி. அபிவிருத்தி வேலைகள் தாமதப்படும். உணவு இறக்குமதி அதிகரிக்கும். வல்லரசுகளின் செடுபிடி அதிகரித்தல். சங்கீதம், நடனம் முதலிய கலைகள் விருத்தி என்பன உண்டு.

## இந்துக்களின் விசேஷ தினங்கள்

ஜனவரி 14 — தைப்பொங்கல்
,, 15 — பட்டிப் பொங்கல்
மார்ச் 8 — மகாசிவராத்திரி
ஏப்ரல் 14 — அக்ஷய வருடப்பிறப்பு
மே 23 — வைகாசி விசாகம்
ஜூலை 13 — ஆனி உத்தரம்
ஆகஸ்ட் 15 — வரலக்ஷ்மி விரதம்
,, 27 — கிருஷ்ண ஜயந்தி
செப்ட. 7 — விநாயக சதுர்த்தி
அக்டோ. 4 — நவராத்திரி
,, 11 — சரஸ்வதி பூஜை
,, 12 — விஜயதசமி
நவம்பர் 1 — தீபாவளி
,, 1 — கேதார கௌரி விரதம்
,, 2 — ஸ்கந்த ஷஷ்டி
,, 16 — திருக்கார்த்திகை
,, 17 — விஷ்ணுவாலய தீபம்
டிசம்பர் 6 — விநாயக சஷ்டி விரதம்
,, 8 — திருவெம்பாவை
,, 16 — நடேசர் அபிஷேகம்
,, 17 — ஆருத்திரா தரிசனம்

## கிறிஸ்தவ திருநாட்கள்

ஜனவரி 20 - நாவுட்டான் சூரிய கட்டைக் காடு புனித செபஸ்தியார் விழா
பெப். 11 - தும்பளை, போயிட்டி, இளவாலை மாந்தை திருக்கேதீஸ்வரம் லூர்த்து மாதா திருநாள்
,, 12 - விபூதித் திருநாள்
மார்ச் 19 - அர்ச் சூசையப்பர் திருநாள்
,, 23 - குருத்தோலை ஞாயிறு
,, 28 - பெரிய வெள்ளி
,, 30 - உயிர்த்த ஞாயிறு
மே 13 - இரணைப்பாலை மு. பாத்திமா அன்னை திருநாள்
,, 31 - தேவதாய் வணக்க மாத முடிவு
ஜூன் 13 - புனித அந்தோனியார் திருநாள்
,, 22 - திரு இருதய விழா
,, 23 - புனித இராயப்பர் சின்னப்பர் விழா
ஜூலை 2 - மருதமடு அன்னை விழா
,, 26 - புனித யுவக்கின அன்னம்மாள்
ஆகஸ்ட் 15 - தேவதாய் விண்ணேற்பு விழா
,, 22 - மரியன்னையின் திரு இருதயம்
செப். 8 - தேவதாய் பிறப்பு
,, 15 - தேவமாதாவின் ஏழு துக்கங்கள்
அக். 7 - செபமாலை அன்னை
நவ. 1 - புனித அனைவர் திருநாள்
,, 2 - இறந்த விசுவாசிகள் நினைவுதினம்
டிச. 3 - புனித பிரான்சிஸ் சவேரியார்
,, 8 - கன்னிமேரியின் அமல உற்பவம்
,, 25 - நத்தார் திருநாள்

## இஸ்லாமிய திருநாட்கள்

ஜனவரி 26 - குணங்குடிமஸ்தான் சாஹிபு (ரஹ்) வபாத்து
பெப். 3 - சதாவதானி மகாமதி ஷெய்குத் தம்பிப் பாவலர் நினைவு தினம்
,, 11 - கல்முனை - கடற்கரை பள்ளி விசேடம்
,, 26 - கொழும்பு - ஆலிம் ரஹ் வபாத்து
மார்ச் 3 - கொச்சி ஆற்றக்கோயா தங்கள் வபாத்து
,, 25 - ஞானப்புகழ்ச்சி பாடல் தினம்
,, 30 - மிலித்துவைப் பள்ளி விசேடம்
ஏப்ரல் 21 - அல்லாமா இக்பால் நினைவு தினம்
,, 30 - காரைக்கால் மஸ்தான் (ரஹ்) வபாத்து
மே 3 - அம்பைப்பள்ளி விசேடம்
,, 13 - கௌது நாயகம் பிறந்த தினம்
,, 15 - பாத்திமாநாயகி (றழி) வபாத்து
ஜூன் 7 - புனித லைலத்துல் கத்ர் இரவு
,, 11 - ஈதுர் பித்ர் நோன்புப் பெருநாள்
,, 27 - கன்னத்தோட்டை பள்ளி விசேடம்
ஜூலை 11 - தவசிரேஷ்ட கல்வத்து நாயகம் (றழி) வபாத்து
ஆகஸ்ட் 17- ஹஜ்ஜுப் பெருநாள்
செப். 8 - முஹர்ரம் இஸ்லாமிய வருடப் பிறப்பு 1407
,, 9 - அருள்வாக்கு அப்துல் காதிர் நினைவு தினம்
அக். 27 - காலி - கின்துறை ஷெய்ஹா ஹுசைன் (ரஹ்) வபாத்து
நவ. 15 - மீலாதுன் நபி தினம்
,, 18 - சீறு உமறுப் புலவர் சிறப்பு நாள்
டிச. 15 - போர்வை பள்ளி விசேடம்
,, 16 - காயிதே அஃலம் பிறப்பு

### 1986 ஆங்கில வருடம்

| | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் |
|---|---|---|---|---|
| ஞா | 5 12 19 26 | 2 9 16 23 | 30 2 9 16 23 | 6 13 20 27 |
| தி | 6 13 20 27 | 3 10 17 24 | 31 3 10 17 24 | 7 14 21 28 |
| செ | 7 14 21 28 | 4 11 18 25 | 4 11 18 25 | 1 8 15 22 29 |
| புத | 1 8 15 22 29 | 5 12 19 26 | 5 12 19 26 | 2 9 16 23 30 |
| வி | 2 9 16 23 30 | 6 13 20 27 | 6 13 20 27 | 3 10 17 24 |
| வெ | 3 10 17 24 31 | 7 14 21 28 | 7 14 21 28 | 4 11 18 25 |
| சனி | 4 11 18 25 | 1 8 15 22 | 1 8 15 22 29 | 5 12 19 26 |

| | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் |
|---|---|---|---|---|
| ஞா | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 31 3 10 17 24 |
| தி | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 |
| செ | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 |
| புத | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 |
| வி | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 |
| வெ | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 |
| சனி | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 | 2 9 16 23 30 |

| | செப்டெம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|
| ஞா | 7 14 21 28 | 5 12 19 26 | 30 2 9 16 23 | 7 14 21 28 |
| தி | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 |
| செ | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 |
| புத | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 |
| வி | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 |
| வெ | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 |
| சனி | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 |

### 1986 குரோதன ஹூ அக்ஷய ஹூ தமிழ்

| | மார்கழி தை | தை மாசி | மாசி பங்குனி | பங்குனி சித்திரை |
|---|---|---|---|---|
| ஞா | 21 28 6 13 | 20 27 4 11 | 17 18 25 3 10 | 24 31 7 14 |
| தி | 22 29 7 14 | 21 28 5 12 | 18 19 26 4 11 | 25 1 8 15 |
| செ | 23 1 8 15 | 22 29 6 13 | 20 27 5 12 | 19 26 2 9 16 |
| பு | 17 24 2 9 16 | 23 30 7 14 | 21 28 6 13 | 20 27 3 10 17 |
| வி | 18 25 3 10 17 | 24 1 8 15 | 22 29 7 14 | 21 28 4 11 |
| வெ | 19 26 4 11 18 | 25 2 9 16 | 23 1 8 15 | 22 29 5 12 |
| சனி | 20 27 5 12 | 19 26 3 10 | 17 24 2 9 16 | 23 30 6 13 |

| | சித்திரை வைகாசி | வைகாசி ஆனி | ஆனி ஆடி | ஆடி ஆவணி |
|---|---|---|---|---|
| ஞா | 21 28 4 11 | 18 25 1 8 15 | 22 29 4 11 | 15 18 25 1 8 |
| தி | 22 29 5 12 | 19 26 2 9 16 | 23 30 5 12 | 19 26 2 9 |
| செ | 23 30 6 13 | 20 27 3 10 | 17 24 31 6 13 | 20 27 3 10 |
| பு | 24 31 7 14 | 21 28 4 11 | 18 25 32 7 14 | 21 28 4 11 |
| வி | 18 25 1 8 15 | 22 29 5 12 | 19 26 1 8 15 | 22 29 5 12 |
| வெ | 19 26 2 9 16 | 23 30 6 13 | 20 27 2 9 | 16 23 30 6 13 |
| சனி | 20 27 3 10 17 | 24 31 7 14 | 21 28 3 10 | 17 24 31 7 14 |

| | ஆவணி புரட்டாதி | புரட்டாதி ஐப்பசி | ஐப்பசி கார்த். | கார்த். மார்கழி |
|---|---|---|---|---|
| ஞா | 22 29 5 12 | 19 26 2 9 | 14 16 23 30 7 | 21 28 6 13 |
| தி | 16 23 30 6 13 | 20 27 3 10 | 17 24 1 8 | 15 22 29 7 14 |
| செ | 17 24 31 7 14 | 21 28 4 11 | 18 25 2 9 | 16 23 1 8 15 |
| பு | 18 25 1 8 | 15 22 29 5 12 | 19 26 3 10 | 17 24 2 9 16 |
| வி | 19 26 2 9 | 16 23 30 6 13 | 20 27 4 11 | 18 25 3 10 |
| வெ | 20 27 3 10 | 17 24 31 7 14 | 21 28 5 12 | 19 26 4 11 |
| சனி | 21 28 4 11 | 18 25 1 8 | 15 22 29 6 13 | 20 27 5 12 |

### ஹிஜ்ரி 1406–1407

| | அர ற ஆ ஜ அ | ஜ அ ஜ ஆ | அர ஜ ஆ றஜ | அர றஜப் ஷஃ. |
|---|---|---|---|---|
| ஞா | 23 1 8 15 | 22 29 6 13 | 18 20 27 4 11 | 25 3 10 17 |
| தி | 24 2 9 16 | 23 30 7 14 | 19 21 28 5 12 | 26 4 11 18 |
| செ | 25 3 10 17 | 24 1 8 15 | 22 29 6 13 | 20 27 5 12 19 |
| புத | 19 26 4 11 18 | 25 2 9 16 | 23 30 7 14 | 21 28 6 13 20 |
| வி | 20 27 5 12 19 | 26 3 10 17 | 24 1 8 15 | 22 29 7 14 |
| வெ | 21 28 6 13 20 | 27 4 11 18 | 25 2 9 16 | 23 1 8 15 |
| சனி | 22 29 7 14 | 21 28 5 12 | 19 26 3 10 17 | 24 2 9 16 |

| | அர ஷஃ. றம் | அர றம் ஷவ் | அர ஷவ் துக | அர துக ஹஜ் |
|---|---|---|---|---|
| ஞா | 24 1 8 15 | 22 29 6 13 20 | 27 5 12 19 | 24 26 3 10 17 |
| தி | 25 2 9 16 | 23 30 7 14 21 | 28 6 13 20 | 27 4 11 18 |
| செ | 26 3 10 17 | 24 1 8 15 | 22 29 7 14 21 | 28 5 12 19 |
| புத | 27 4 11 18 | 25 2 9 16 | 23 1 8 15 22 | 29 6 13 20 |
| வி | 21 28 5 12 19 | 26 3 10 17 | 24 2 9 16 23 | 30 7 14 21 |
| வெ | 22 29 6 13 20 | 27 4 11 18 | 25 3 10 17 | 24 1 8 15 22 |
| சனி | 23 30 7 14 21 | 28 5 12 19 | 26 4 11 18 | 25 2 9 16 23 |

| | அர துஹ மு | அர முஹ ஸபர் | அர ஸபர் ற-அ | அர ற-அ ற-ஆ |
|---|---|---|---|---|
| ஞா | 2 9 16 23 | 30 7 14 21 | 27 28 6 13 20 | 4 11 18 25 |
| தி | 25 3 10 17 24 | 1 8 15 22 | 29 7 14 21 | 28 5 12 19 26 |
| செ | 26 4 11 18 25 | 2 9 16 23 | 1 8 15 22 | 29 6 13 20 27 |
| புத | 27 5 12 19 | 26 3 10 17 24 | 2 9 16 23 | 30 7 14 21 28 |
| வி | 28 6 13 20 | 27 4 11 18 25 | 3 10 17 24 | 1 8 15 22 |
| வெ | 29 7 14 21 | 28 5 12 19 26 | 4 11 18 25 | 2 9 16 23 |
| சனி | 1 8 15 22 | 29 6 13 20 | 27 5 12 19 26 | 3 10 17 24 |

### பாடசாலைத் தவணை விவரம்

**தமிழ் - சிங்கள பாடசாலைகள்**

1 ம் தவணை — ஜனவரி 6ம் திகதி முதல் ஏப்ரல் 4ம் திகதி வரை
2 ம் தவணை — மே 5ம் திகதி முதல் ஜூலை 31ம் திகதி வரை
3 ம் தவணை — செப்டம்பர் 1ம் திகதி முதல் டிசம்பர் 5ம் திகதி வரை

**முஸ்லிம் பாடசாலைகள்**

1 ம் தவணை — ஜனவரி 6ம் திகதி முதல் மே 9ம் திகதி வரை
2 ம் தவணை — ஜூன் 17ம் திகதி முதல் ஆகஸ்ட் 1ம் திகதி வரை
3 ம் தவணை — செப்டம்பர் 1ம் திகதி முதல் டிசம்பர் 5ம் திகதி வரை

### அரசாங்க, வங்கி, வர்த்தக; பூரணை விடுமுறை நாட்கள் - 1986

ஜனவரி 14 தமிழ் தைப்பொங்கல் தினம் *‡†
ஜனவரி 25 பூரணை விடுமுறைத் தினம் *‡
பெப். 04 சுதந்திர ஞாபகார்த்த தினம் *‡†
பெப். 24 பூரணை விடுமுறைத் தினம் *‡
மார்ச் 08 மகா சிவராத்திரி தினம் *‡
மார்ச் 25 பூரணை விடுமுறைத் தினம் *‡
மார்ச் 28 பெரிய வெள்ளிக்கிழமை *‡
ஏப்பிரல் 13 சிங்கள, தமிழ் புதுவருடத்திற்கு முந்திய தினம் *‡†
ஏப்பிரல் 14 சிங்கள, தமிழ் புதுவருட தினம் *‡†
ஏப்பிரல் 15 மேலதிக வங்கி விடுமுறை தினம் ‡
ஏப்பிரல் 24 பூரணை விடுமுறைத் தினம் *‡
மே 01 உலக தொழிலாளர் தினம் *†‡
மே 22 தேசிய வீரர்கள் தினம் *‡†
மே 23 வெசாக் பூரணை விடுமுறைத் தினம் *‡
மே 24 வெசாக் பூரணைத் தினத்திற்கு பிந்திய தினம் *‡†
யூன் 10 ஈதுல் பித்ர் (ரம்ழான் தினம்) *†
யூன் 21 பொசன் பூரணை விடுமுறைத் தினம் *‡
யூன் 30 விசேட வங்கி விடுமுறை தினம் ‡
யூலை 20 பூரணை விடுமுறைத் தினம் *‡
ஓகஸ்ட் 17 ஈதுல் அல்கா (ஹஜ்ஜுப் பெருநாள்) *‡
ஓகஸ்ட் 19 பூரணை விடுமுறைத் தினம் *‡
செப். 17 பூரணை விடுமுறைத் தினம் *‡
அக். 17 பூரணைவிடுமுறைத் தினம் *‡
நவ. 01 தீபாவளித் திருநாள் *‡
நவ. 15 மீலாதுன் நபி (நபி நாயகம் அவர்களின் பிறந்த தினம்) *‡†
நவ. 15 பூரணை விடுமுறைத் தினம் *‡
டிச. 15 பூரணை விடுமுறைத் தினம் *†
டிச. 25 நத்தார் திருநாள் *†‡
டிச. 31 விசேட வங்கி விடுமுறை தினம் ‡

(சனிக்கிழமைகள் அனைத்தும் வங்கி விடுமுறை)
*அரசாங்க விடுமுறை நாட்கள்
‡வங்கிவிடுமுறைநாட்கள்.
†வர்த்தக தல விடுமுறை நாட்கள்
மேற்சொல்லப்பட்ட அரசாங்க விடுமுறை நாட்கள் தபால், சுங்கம், வானிலை அவதானம் முதலிய திணைக்களங்களுக்கும் பொருந்தும்.

## உள்ளூர் தபாற் கட்டண விவரம்

| | |
|---|---|
| கடிதங்கள் | 75 சதம் |
| அஞ்சல் அட்டை | 50 சதம் |
| பதிவுத் தபால் | 5.00 ரூபா |
| சஞ்சிகைகள் | 50 சதம் |
| அரைக் கிலோ பார்சல்கள் | 3.00 ரூபா |
| மேலதிக அரைக் கிலோ | 1.50 சதம் |
| காப்புறுதி 100 ரூபாவுக்கு | 5.00 ரூபா |
| கடுகதி | 6 00 ரூபா |
| தாமதம் | 1.25 சதம் |
| அச்சான - ஒட்டப்படாதது 30 கிரும் | 50 சதம் |
| மேலதிக 60 கிரும் | 35 சதம் |
| அடையாள அட்டை | 15.00 ரூபா |
| தந்திக் காசுக் கட்டளை நிலையானது | 3.25 சதம் |
| முத்திரையோடு உறை | 85 சதம் |
| மணிஓடர் கமிஷன் 50ரூபாவுக்கு | 1.25 சதம் |
| போஸ்ரலோடர் கமிஷன் 1 ரூபாவுக்கு | 25 சதம் |
| வான் கடிதம் | 6.00 ரூபா |

## வெளிநாட்டுத் தபாற் கட்டணங்கள்

### விமானத் தபால்

| | முதல் 10 கி. | மேலதிக 10 கி. |
|---|---|---|
| அமெரிக்கா | 10.00 | 7 00 |
| கனடா | 10.00 | 7 00 |
| மக்கள் சீனக் குடியரசு | 8.50 | 5 00 |
| டுபாய் | 7.00 | 4.00 |
| ஜப்பான் | 8.30 | 5.50 |
| இந்தியா | 6,30 | 2.50 |
| குவைத் | 7.00 | 4.00 |
| லிபியா | 8.00 | 4.00 |
| ஈரான் | 8 00 | 4.00 |
| மலேசியா | 7.00 | 4.00 |
| சிங்கப்பூர் | 7.00 | 5.00 |
| மாலைதீவு | 6 50 | 2.50 |
| நோர்வே | 8.50 | 5.00 |
| ஓமான் | 7.00 | 4.00 |
| பாகிஸ்தான் | 6.50 | 2.50 |
| சவூதி அரேபியா | 7.00 | 4.00 |
| ஜெர்மனி | 8 50 | 5 00 |
| பிரான்ஸ் | 8.50 | 5 00 |
| பிரித்தானியா | 10.00 | 7.00 |

## குருபூஜைத் தினங்கள்

ஜனவரி 2 - இயற்பகையார்
,, 22 - கண்ணப்பர்
,, 30 - சண்டேசுவரர்
பெப். 2 - திருநீலகண்டர்
,, 10 - அப்பூதியடிகள்
,, 19 - கச்சியப்பர்
,, 26 - திருவள்ளுவர்
மார்ச் 22 - யோகர் சுவாமி
,, 28 - காரைக்காலம்மையார்
ஏப்ரல் 22 - உமாபதி சிவாசாரியார்
மே 3 - திருநாவுக்கரசர்
மே 25 - திருஞானசம்பந்தர்
ஜூலை 11 - மாணிக்கவாசகர்
,, 21 - பட்டினத்தடிகள்
ஆகஸ்ட் 12 - சுந்தரமூர்த்தி சுவாமிகள்
செப். 3 - இளையான் குடிமாறர்
,, 5 - மறைஞானசம்பந்தர்
,, 12 - குங்குலியக் கலயர்
,, 24 - திருநாளைப் போவார்
அக்டோ 2 - அருணந்தி சிவாசாரியார்
நவம்பர் 2 - மெய்கண்டதேவர்
,, 14 - திருமூலர்
,, 24 - ஆறுமுகநாவலர்
டிசம்பர் 6 - இராமநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?
-மகாகவி பாரதியார்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073
14-01-86 த. பெ. 23

# பொங்கல் சங்கற்பம்: உணவுப் பெருக்கம்

இன்று தைப்பொங்கல். தமிழர் தொன்று தொட்டுக் கொண்டாடி வரும் சிறப்பான பெருநாள். மண்ணில் வளம் செழித்து, பயிரிலே பசுமை செழித்து, விளைவிலே பொலிவு ததும்ப உதவிய உதயனுக்கு, விவசாயி நன்றி செலுத்திப் பொங்கிப் படைத்து, சுற்றம் சூழ இருந்து மகிழ்வுறும் மரபு தைப் பொங்கல் திருநாளில் மிளிர்கிறது.

எமது உலகம் இயங்க, உயிர்கள் வாழ உறுதுணையாக விளங்குபவன் உதயன். வருடத்தில் ஒரு நாளாவது அவனுக்கு நன்றிக் கடன் செலுத்தி விழா எடுக்க வேண்டும் என்ற மனப்பக்குவம் தமிழ் மக்களின் நன்றி உணர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டு. தனது மனத்தின் பொங்குதலை அவன் பானையில் பால் ஊற்றிப் பொங்குவதன் மூலம் பிரதிபலித்தான்.

ஆனல் இலங்கை வாழ் தமிழ் மக்களின் மனம் இன்று பொங்கும், மகிழ்வுறும் நிலையிலா இருக்கிறது? நாளுக்கு நாள் சோதனையும் வேதனையும் அவன் வாழ்வில் விரவி விட்டன. உரிமையை இழந்து, உடைமையை இழந்து, உயிரையும் இழக்கும் இக்கட்டான, மிக நெருக்கடியான கட்டத்தில் அவன் வாழ்ந்து கொண்டிருக்கிருன்.

மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த அரசியலில் அவன் அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிருன். வாழ்க்கை இயக்கத்துக்குப் பிரதானமாக விளங்கும் பொருளியல் துறையில் அவன் கைகள் கட்டுப்பட்டுச் சோர்ந்து விட்டன. தமிழனின் கலை, கலாசாரம், பண்பாடு, நாகரிகப் பெருமை எல்லாம் அழிந்தொழியும் தறுவாயில் இருக்கின்றன.

எனினும் அடக்கமாகவேனும் பொங்கல் கொண்டாட வேண்டும் என்று தமிழர் மனம் விரும்புகிறது. கஷ்டத்தைக் கண்டு கலங்காத, துயரத்தைக் கண்டு துவளாது இருப்பவனே வாழ்க்கையில் வெற்றி அடைகிருன். தமிழனுக்கும் அந்தத் துணிவு தான் இப்போது அவசியம். அது ஒன்றே அவனை வாழ வைக்கும். அவன் பரம்பரையினராவது நல்வாழ்வு வாழ அடியெடுத்துக் கொடுக்கும்.

உயிர் வாழ உணவே பிரதானம். கஷ்டமான சூழ்நிலையிலும் அந்த உணவைத் தேட வேண்டிய கட்டாயம் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. பிறநாடுகளில் இருந்து வரும் உணவு வகைகளை நம்பி நாம் இன்னும் நீண்ட காலத்திற்கு வாழ முடியாது.

தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள ஒவ்வோர் அங்குல மண்ணும் பண்படுத்தப்பட்டு பயிர் செய்யப்பட வேண்டும். எங்களுக்குத் தண்ணீர் வசதி குறைவு என்பது உண்மை தான். எனினும் இருக்கும் வசதிகளைப் பயன்படுத்தியாவது நாம் உணவு உற்பத்தியைப் பெருக்கலாம் அல்லவா?

ஒவ்வொரு வீட்டிலும் உணவுப் பயிர்களை வளர்க்கலாம். மனம் இருந்தால் இடமுண்டு. வீட்டுக் காணி முழுவதிலும் பூந்தோட்டம் வைப்பதற்குப் பதிலாக பெரும் பகுதியில் காய்கறித் தோட்டம் செய்யலாம்.

எமது முன்னேர் முயற்சிக்குப் பெயர் பெற்றவர்கள். நாம் அதற்கு நேர்மாருகச் சோம்பேறிகள் ஆகிவிட்டோம். வசதிக் குறைவுகளைச் சொல்லி, வீண் காலம் போக்குகின்ரோம்.

இந்த நிலை மாற வேண்டும். எமது சொந்த உணவுத் தேவைகளை ஓரளவுக்காவது நாமே உற்பத்தி செய்யும் நிலைக்கு வர வேண்டும்.

முயற்சி திருவினையாக்கும். மன உறுதி திரு விளைவிக்கும்.

"ஆக்கம் இழந்தேமென்று அல்லா வார் ஊக்கம்,
ஒருவந்தம் கைத்துடையார்."

என்ற பொய்யாமொழி எமக்கு வேண்டியது.

தமிழ்ப்பகுதி எங்கும் உணவுப் பெருக்கம் செய்ய வேண்டும்.

அந்த உணர்வு தமிழர் மனதில் பொங்க வேண்டும்.

உழவுத் தொழிலை மகிமைப்படுத்தும் பொங்கல் திருநாளில் தமிழர் நாம் அதனைச் சங்கற்பம் செய்வோமாக!

## கிளிநொச்சியில் வெள்ள அபாயம்

கிளிநொச்சி, ஜன 14

கிளிநொச்சியில் வெள்ள அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

பிரதான கண்டி வீதி உட்பட சகல வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பாதைகளில் உள்ள குன்றுகள் குழிகள் அனைத்தும் நீர்மூடிப்பாய்வதால் வாகனப்போக்குவரத்துக்களும் மக்கள் நடமாட்டமும் குறைந்துள்ளன.

அலுவலகங்கள், வியாபார நிலையங்கள், சந்தை என்பன மக்கள் வரவு இன்றி மூடிக் கிடக்கின்றன.

பிரதான அலுவலகங்களான வைத்தியசாலை, தபாற்கந்தோர் ஆகியவற்றுக்கும் மக்கள் செல்ல முடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது.

வாய்க்கால்களும், சிறு குளங்களும் நீர் நிரம்பி வழிய ஆரம்பித்துள்ளன. மக்கள் வசிப்பிடங்களைச் சுற்றியும் நீர்தேங்க ஆரம்பித்துள்ளன.

# முதலமைச்சரின் அனுமதியுடன் மத்திய பொலிஸ் மாநிலம் வரலாம்

## கூட்டணியின் மாற்று யோசனை

இன்று பிரசுரமாகும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகளில் மாநில பொலிஸ் படைக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

**பொலிஸ் அதிகாரம்**

பொலிஸ் சட்ட விதிகள், குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை ஆகியவற்றின் கீழ் பொலிஸ் அதிகாரிகளாக மாநில பொலிஸ் சேவையைச் சேர்ந்தவர்களும் கருதப்படுவர்.

தண்டனைச் சட்டக் கோவை, லஞ்ச விசாரணைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் அவர்கள் அரச ஊழியர்களாகக் கருதப்படுவர்.

மாநிலத்தினுள் சட்டத்தையும் ஒழுங்கையும் பராமரிக்கும் பொறுப்பு மாநில பொலிஸ் படையினருக்கு உண்டு.

மாநிலத்தில் உள்ள மக்களின உயிர், உடைமைகளைப் பாதுகாப்பது,

மாநிலத்தில் இடம் பெறும் குற்றங்களைத் தடுப்பது, கண்டுபிடிப்பது, விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பது,

மாநில அரசுக்கு எதிரான குற்றங்கள் பற்றி விசாரணை செய்வது –

ஆகியன மாநில பொலிஸ் படையினருக்கு வழங்கப்பட வேண்டும்.

கரன்ஸி, முத்திரை சம்பந்தமான குற்றங்கள் பற்றிய விசாரணைகளை மத்திய பொலிஸ் படையினர் மேற்கொள்ளலாம்.

மாநில பொலிஸார் அக்குற்றங்கள் பற்றி விசாரணை நடத்த அதிகாரம் இருக்க வேண்டும்.

இது போன்ற விசாரணைகள் சிக்கலானவை என்று சட்டமா அதிபர் அபிப்பிராயப்பட்டால், அவர் முதலமைச்சருடன் கலந்தாலோசித்து விசாரணையை குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் மேற்பார்வையில் நடத்த உத்தரவிடலாம்.

மாநில அரசினுல் நிறைவேற்றப்பட்ட சகல சட்டங்களையும் மாநில பொலிஸ் படையினரே அமுல் நடத்த வேண்டும்.

**முதல் அமைச்சருக்குள்ள விசேட அதிகாரங்கள்**

மாநிலத்தினுள் சட்டம், ஒழுங்கு பராமரிப்பில் தடைகள் ஏற்பட்டு இருப்பதாக முதலமைச்சர் அபிப்பிராயப்பட்டால், அவர், மத்திய பொலிஸ் படையினரில் சேவையைப் பெறலாம்.

மாநிலத்தினுள் மத்திய பொலிஸ் படையினர் சேவை செய்யும் காலம் வரை, மாநில அரசுக்குப் பொறுப்பாக இருப்பர்.

**ஜனதிபதியின் அதிகாரங்கள்**

பொதுசனப் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படுவதாக ஜனதிபதி கருதுமிடத்து, அல்லது முதலமைச்சர் கோருமிடத்து, பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் 3ஆம் பகுதியின் பிரகாரம் முதலமைச்சரின் அனுசரணையுடன் ஆயுதப்படையைமத்திய பொலிஸ் படையை அப்பகுதிக்கு அனுப்பி சட்டம், ஒழுங்கை நிலைநாட்டலாம்.

அப்படி ஆயுதப்படையினர், மத்திய பொலிஸ் படையினர் அனுப்பும் பொழுது மாநிலத்தில் உள்ள எந்த இனத்தின் மீதும் அடக்கு முறையைச் செலுத்தக் கூடிய முறையில் அவர்கள் தெரிவு செய்யப்படக் கூடாது.

(தொடரும்)

**ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை**

## தோற்றுதோருக்கு மீண்டும் 28 இல் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 14

கடந்த ஆண்டு ஜூலை, டிசம்பர் மாதங்களில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அனுமதி பெற நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்ற முடியாமற் போன விண்ணப்பதாரர்களுக்கு ஜனவரி 28 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை நடத்தப்பட உள்ளது.

கல்வி அமைச்சில் இந்த நேர்முகப்பரீட்சை நடைபெறும்

ஜூலை, டிசம்பர் மாதங்களில் நடந்த நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றத் தவறியவர்கள் சார்பாக இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு, க. சிவஞானம், ஆசிரியர் பயிற்சிக் கல்விப் பணிப்பாளர் திரு. பியதிலகாவைச் சந்தித்து முறையிட்டார்.

அதைத் தொடர்ந்தே, கல்வி அமைச்சு அவர்களுக்கு நேர்முகப் பரீட்சையை நடத்த முன்வந்துள்ளது.

21.4.84 அன்ரே, அல்லது அதற்கு முன்னரோ நியமனம் பெற்ற ஆசிரியர்கள், பயிற்சிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதிருப்பின் பதிவுத்தபால் ரசீது, விண்ணப்பத்தின் பிரதி ஆகியவற்றை எடுத்துக் கொண்டு நேரடியாகக் கல்வி அமைச்சுக்குச் சென்று நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம்.

இதற்கான ஒழுங்குகளை ஆசிரியர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு சிவஞானம் செய்துள்ளார்.



**பொய்யாமொழி**

குறள்:
அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

பொருள்:
அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே ஆகும்; அதுவும் மற்றவன் பழிக்கும் குற்றம் இல்லாமல் விளங்கினல் மேலும் நன்மையாகும்.

## கண்ட, கண்ட நேரங்களில் வார்ட்டுகளுள் நுழையாதீர்

### யாழ் வைத்திய அத்தியட்சகர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜன. 14

சந்திக்கும் நேரங்களைத் தவிர்ந்த ஏனைய நேரங்களில் ஆஸ்பத்திரி வார்ட்டுகளுக்குள் புகுந்து தொந்தரவு செய்யாதீர்கள். கஷ்டத்தின் மத்தியில் பணிபுரியும் வைத்தியஅதிகாரிகளுக்கு மேலும் இடைஞ்சலைக் கொடுக்காதீர்கள்.

இப்படி யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சுரேந்திரன் நச்சினர்க்கினியன் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கண்டபடி காலநேரம் பாராது வெளியார், வார்டுகளுக்கு நுழைகின்ருர்கள். சத்திரசிகிச்சை அறைக்குள்ளும் நுழைந்து விடுகின்ருர்கள்

இதனுல் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது தடைப்படுகின்றது. வைத்தியர்களும் சிரமப் படுகின்ருர்கள்.

வைத்திய அதிகாரிகளைக் கௌரவத்துடன் நடத்தும் பண்பும் குறைந்து காணப்படுகிறது.

இந்நிலையை நீடிக்கப் பொதுமக்கள் அனுமதிக்கக்கூடாது.

ஆலயத்துக்கு அடுத்தபடி ஆஸ்பத்திரிதான் மக்கள் நல்வாழ்வுக்கு முக்கியமானது.

ஆகவே வைத்திய அதிகாரிகளின் மனம் புண்படாமல் இருக்கப் பொதுமக்களும் உதவவேண்டும்.

இப்படி வைத்திய அத்தியட்சகர் தனது வேண்டுகோளில் சொன்னர்.

## கல்வித்திணைக்களம் அனுமதி

கிளிநொச்சி, ஜன 14

கிளிநொச்சி கல்வி மாவட்டத்திலுள்ள அக்கராயன் கொத்தணிப் பாடசாலைகளின் கீழ் உள்ள அக்கராயன் மகா வித்தியாலயத்தில் 86ம் ஆண்டு முதல் க. பொ. த. உயர்தர வகுப்புக்களை நடத்த கல்வித்திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

அக்கராயன் கொத்தணி அமைப்பு, இப் பாடசாலையில் உயர் வகுப்புக்களை நடத்தக் கோரியமையைத் தொடர்ந்து, கல்வித் திணைக்களம் இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

இதே வேளை இப்பாடசாலைக் கட்டடங்களுக்கு மின்சாரம் வழங்க சுமார் 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பணத்தை 86ஆம் ஆண்டு முன்முகப் படுத்தப் பட்ட நிதியிலிருந்து கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதன் ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

**பிரார்த்தனை இயக்கமா? எதிர்ப்பு இயக்கமா?**

# இலங்கையிலும் இந்தியாவிலும் ஒவ்வொன்று பேசுகிருர்

## தொண்டமான் காரியக்காரர் என்கிருர் சிறிமா

கொழும்பு. ஜன, 14

திரு. தொண்டமான் இலங்கையில் 'பிரார்த்தனை இயக்கம்' என்கிருர் இந்தியாவுக்குப் போய் அதை 'எதிர்ப்பு இயக்கம்' என்கிருர்.

திரு. தொண்டமான் காரியக்காரர். அவரின் பிரார்த்தனை இயக்கம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தீவிரவாதிகளைத் தான் ஊக்குவிக்கும்.

அரசாங்கத்தில் அமைச்சராக இருந்து கொண்டே இதை எல்லாம் திரு. தொண்டமான் செய்கின்ருர்.

யார் உண்மையில் இந்த நாட்டை ஆளுவது?

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா கேட்டார்.

'ஜலண்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் திருமதி பண்டாரநாயக்கா இதைத் தெரிவித்தார்.

திருமதி பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது:

சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தை எழுத்துக்கு எழுத்து அமுல் நடத்தி இருந்தால் நாடற்றவர் இன்று இலங்கையில் இருந்திருக்கமாட்டார்கள்.

ஆண்டு தோறும் 35,000 இந்தியர் இந்தியா செல்ல வேண்டும். இதைத்தான் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் கூறுகின்றது.

நடந்தது என்ன? 1965 இல் இருந்து 1970 வரை 14,000 பேர் தான் இந்தியா திரும்பியுள்ளனர்.

எனக்கு மீண்டும் குடியுரிமை கிடைத்தது திரு. தொண்டமானல் தான் என்பது எந்த அளவுக்கு உண்மையோ தெரியவில்லை. திரு. தொண்டமானுக்குத் தான் அது தெரியும். அது உண்மையாயின், பாரதூரமான விஷயம்.

இது திரு. தொண்டமான் எவ்வளவு சக்தி வாய்ந்தவர் என்பதைக் காட்டுகின்றது.

ஜனதிபதியை 'பிளாக் மெயில்' பண்ணக்கூடிய அளவுக்கு திரு. தொண்டமான் இருக்கின்ருர். ஜனதிபதியை வேலை நிறுத்தத்தைக் காட்டி மிரட்டுகின்ருர்.

திருமதி இந்திரா காந்தி, திரு. ராஜீவ் காந்தி கூறியும் கூட ஜனதிபதி எனக்குக் குடியுரிமையைத் தரவில்லை. ஆனல் திரு. தொண்டமான் சொல்வது உண்மையானல் அவர் எவ்வளவு சக்தி வாய்ந்தவர் என்பதை இது காட்டுகின்றது.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்ஞர்.

## எந்தச் சூழ்நிலையிலும் சிறப்பான சேவை

### தலைவர் பெருமிதம்

யாழ்ப்பாணம், ஜன. 14

சூழ்நிலை எதுவாக இருப்பினும் பொது மக்களுக்கு இறுதிவரை நின்று ஆதரவு கொடுக்கும் ஒரே சேவை வட பிராந்திய போக்குவரத்துச் சேவையே.

இப்படித் தெரிவித்திருக்கிருர் வடபிராந்திய போக்குவரத்துச் சபை தலைவர் திரு. சி. கனகரத்தினம்.

சபையின் ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் அவர் விடுத்த தைப் பொங்கல் செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

துர் அதிர்ஷ்டவசமாக, எதிர்பாராத வகையில் எமது நாட்டில் ஏற்பட்ட, ஏற்படுகின்ற அசம்பாவிதம் காரணமாக, நாம் எதிர்பார்த்த திருப்திகரமான பஸ் சேவையை எமது மக்களுக்கு வழங்கமுடியாமைக்கு மிகவும் கவலை அடைகிருேம். எனினும், எமது மக்கள், நிலைமைமையைப் புரிந்து கொண்டு எம்மேல் குற்றம் சுமத்தாமல் எம்முடன் ஒத்துழைத்து எமது சேவைக்கு நல்லாதரவு தருகின்ருர்கள்.

பஸ் வண்டிகள் பற்றாக்குறை, எரிபொருள் தட்டுப்பாடு, பஸ் வண்டிகளுக்கான உதிரிப்பாகங்கள் பெறும் சிரமம் இவைகளுக்கு மத்தியில் நாம் சேவையாற்ற வேண்டியுள்ளது என்பதை யாவரும் நன்குணர்வர். எவ்வகைச் சிரமத்தின் மத்தியிலும் எமது ஊழியர்கள கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் பரந்த நோக்கோடு தத்தம் கடமைகளைத் திறம்பட புரிகின்ருர்கள்.

மக்களின் சேவைக்காக, உயிரைப் பணயம் வைத்து எமது ஊழியர்கள் சேவையாற்றிய சந்தர்ப்பங்கள் அநேகம் உள்ளன.

இப்படி அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## வித்தாரம்

முரளியாரே வாரும்! பொங்கல் வாழ்த்துக்கள்!! நீர் வயதில் குறைந்தவனுக இருந்தாலும் வாழ்த்துச் சொல்ல வேண்டிய நேரத்திலை வாழ்த்துச் சொல்லத்தான் வேணும்.

என்னடா அப்பா, வயதுக்கு மூத்தநான் உனக்கு வாழ்த்துச் சொல்லுறேன், நீ முறைச்சுப் பாக்கிருய்!

ஓகோ, நான் வீட்டிலை பொங்கினது உனக்குப் பிடிக்கயில்லையாக்கும். தமிழன் தர்மசங்கடமான, பெரிய கஷ்டமான நிலையிலை இருக்கயிக்கை என்ன பொங்கல், பூசை, புனஸ்காரம் எண்டு சொல்லப் போருய். அப்பிடித்தானே!

இந்த நாளையில் பெடியங்கள் உப்பிடித்தான். எல்லாத்தையும் ஒரு பக்கத்தாலை பாக்கிறது. அது கூடாதப்பா.

கஷ்டமும் கவலையும், இல்லாத வாழ்க்கை யாருக்கடா நிரந்தரம். நாங்கள்இப்ப கஷ்டப்படுகிருேம். இன்னற் படுகிருேம்; ஆபத்தான வாழ்க்கை வாழுகிருேம். அது உண்மை. நான் மறுக்கயில்லை. ஆனல் அதுகளை எல்லாம் எதிர்கொள்ளப் பழகவேணும். அங்கைதான் வாழ்க்கையின் வெற்றி ரகசியம் இருக்கு.

போனமுறை பொங்கலுக்குத்தானே, தமிழீழக் கொடி ஏத்தப் போருங்கள் எண்டு அச்சாணியார் கூக்குரல் போட்டு, ஆயுத பலத்தைக் கூட்டினவர். இந்தப் பொங்கலும் வந்திட்டுது. ஆனல் தீர்வும் வரயில்லை போரும் முடியயில்லை. அவர் இந்தப் பொங்கலுக்கும் போர்க் கோலத் தோடைதான் நிக்கிருர்.

அவற்றை ஒரு தலைப் பட்ச யுத்த நிறுத்தம் இன்னும் தொடருது. அவர் யுத்த நிறுத்தம் எண்டு சொல்லிச்சொல்லித்தான் தமிழ் ஆக்களை சுட்டுக்கொல்லத் திட்டமிட்டிருக்கிருர் போலை. விடு அவரை.

* * *

பொங்கலண்டு தானே எங்கடை தொண்டமான் மலையகம் எங்கும் பிரார்த்தனைத் திட்டத்தைத் தொடங்க இருந்தவர். நேற்றைக்குப் பின்னேரம் ஐஞ்சுமணிவரையும் அது தொடங்குமோ தொடங்காதோ எண்ட நிலைதான் நீடிச்சுது.

பம்பாய், சென்னை, டில்லி எண்டு இந்தியா போய்வந்த களையோடை அவருக்குப் பெரியவரைச் சந்திக்க முடியவில்லை. இப்ப அடுத்த பெரியவர் லலித்தானே. பிரேமதாச மூலையுக்குள்ளை யல்லோ. தொண்டமானும் லலித்தைத்தான் சந்திக்கவேண்டி இருந்திது. சந்திச்சார். தீர்க்கமான முடிவில்லை. முடிவு எப்படியிருக்கும் எண்டதை எங்கடை உதயனிலை நேற்று வாசிச்சிருப்பாய்.

இது எல்லாம் ஒரு சோந்து விளையாடுற விளையாட்டா தம்பி. உள்ளாடும் கள்ளாடும் எண்டு சொல்லுவாங்கள். அதுமாதிரி.

பிரார்த்தனை நடக்க வேணும் அதாலை குழப்பம் வரவேணும் எண்டது எங்கடை விருப்பமில்லை. ஆனு மலையகத் தமிழருக்கு இலங்கைக் குடியுரிமை கிடைக்கு தெண்டா அதுதான் பெரிசு.

சாலம் காலமாய் இந்த நாட்டுக்கு உழைச்சுக் கொடுத்திட்டு அவை நாடில்லாதவங்கள் எண்டு பேர் எடுக்கிறதே. இதிலை தொண்டமான் வெண்டிட்டார் எண்டால் அவருக்குப் பெரிய வெற்றிதான்.

தொண்டோடி

றியல்ஸ்
மானிப்பாய்
Spoken English
With
GRAMMAR
Mr. தேவராஜா
ஆரம்பம்: 15 - 1 - 86 10.00 A.M.

# உதயன்

14 01-1986

றியல்ஸ்
மானிப்பாய்
O/L, 9

| | |
|---|---|
| விஞ்ஞானம்: | இரா. செல்வவடிவேல் |
| கணிதம்: | ஆனந்தராஜா |
| ஆங்கிலம்: | செல்வரட்ணம் |
| சமூகக்கல்வி: | K. S. முத்துலிங்கம் |
| வர்த்தகம்: | திருமதி கஜேந்திரநாதன் |
| தமிழ்: | பண்டிதர் மகேந்திரலிங்கம் |

## பொங்கல் நிகழ்ச்சிகள்

சுன்னாகம், ஜன 14

இன்று குருப்பசிட்டி மதி கலைஞர் வட்டத்தினர் வெகுவிமரிசையாக பொங்கல் விழாவை நடத்துகின்றனர்.

விழாவுக்குப் பிரதம விருந்தினர்களாக தெல்லிப்பழை உதவி அரச அதிபர் திரு சி. இராசரத்தினமும் திருமதி. இராசரத்தினமும் கலந்து சிறப்பிப்பார்கள்.

விழாவில் பக்திப்பாடல் நிகழ்ச்சிகளும், கலை நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

* * *

நல்லூர், ஜன 14

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் பொங்கல் விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 30 மணியளவில் வித்துவான் க சொக்கலிங்கம் (எம் ஏ) தலைமையில் நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு அருள்மிகு ஸ்ரீவிநாயகர் ஆலயத்தில் நடைபெறும்.

ஆலய முன்றில் பொங்கலிடுதல், திருவெம்பாவை விதிப்பணியில் பங்குபற்றியவர்களுக்கு பரிசில்கள் வழங்கல், மன்ற மாணவ மாணவியர்களின் பண்ணிசை, இன்னிசை அரங்கு, சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

★ மூன்றரை ஆண்டுகள்

# பொலிஸாருக்கு கட்டாய சேவை

கொழும்பு, ஜன. 14

பொலிஸ் சேவையில் சேருபவர்கள் மூன்றரை ஆண்டுகள் கட்டாயமாகப் பணிபுரியவேண்டும்.

இடையில் விலகுவதாயின் 9 500 ரூபா அபராதமாகச் செலுத்திவிட்டு சேவையில் இருந்து விலகலாம்.

இப்படி பொலிஸ் மாஅதிபர் அறிவித்துள்ளார்.

பொலிஸ்படைக்கு புதிதாக ஆள்திரட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

இதுசம்பந்தமான அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டது. விண்ணப்பதாரர்கள் 18-30 வயதுக்குட்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

ஜீ சி. ஈ. பரீட்சையில் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில்சாதாரண சித்தி பெற்றவர்கள் விண்ணப்பங்களை அனுப்பலாம்.

விண்ணப்ப முடிவு திகதி ஏப்ரல் 30.

## ரூபவாஹினி

14 - 1 - 1986

(செவ்வாய்க்கிழமை)

பிற்பகல்

12. 30 – 'பட்டிக்காடா பட்டணமா' (தமிழ்த் திரைப் படம்)
3. 30 – தைப்பொங்கல் (விவரணம்)
3. 45 – தைப்பொங்கல் (விசேட கலை நிகழ்ச்சி)
5. 00 – செய்திகள்
5. 05 – பாடசாலை -விஞ்ஞானம் (தமிழ)
5. 30 – 'பிளாக் பியூட்டி'
6. 00 – விளையாட்டு (சிங்களம்)
6. 15 – 'நிகழ்வின் நிழல்' (நடப்பு விவகாரம் - தமிழ்)
6. 30 - செய்திகள் (தமிழ்)
6. 55 – பிரதிபா- இளைஞர் திறமை
7. 25 – இன்கிரடிபிள்
8. 00 – செய்திகள் (சிங்களம்)
8. 25 – இன்கிரடிபிள் (தொடர்ச்சி)
8. 45 – இசை
9. 00 – செய்திகள் (ஆங்கிலம்)
9. 20 – இசை
9. 45 – 'சுலிவன்ஸ்' அங்கம் 34
10.35 – ஒளிபரப்பு முடிவு

## "பட்டிக்காடா பட்டணமா" இன்று

சுன்னாகம், ஜன. 14

இன்று தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு ரூபவாஹினியில் விசேட ஒளிபரப்புகள் நண்பகல் 12-30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

நண்பகல் 12-30 க்கு "பட்டிக்காடா பட்டணமா" தமிழ்த் திரைப்படம் ஒளிபரப்பாகும்.

பி. ப. 3-30க்கு பொங்கல் விருந்து, கலை நிகழ்ச்சிகளும், பொங்கல் பற்றிய விவரணச் சித்திரமும் ஒளிபரப்பப்படும்.

கிராமிய தொழில் அமைச்சர் திரு. தொண்டமானின் விசேட சிபார்சுக்கிணங்க இந்த ஒளிபரப்பு ஒழுங்கு செய்யப்பட்டது.

## காத்தான்குடி கூட்டுறவுச் சங்கத்தில் பணமும் உணவும் கொள்ளை

மட்டக்களப்பு, ஜன. 14

காத்தான்குடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நேற்று காலை இனந்தெரியாத நபர்கள் நான்கு பேர் ஆயுதங்களுடன் புகுந்து கொள்ளை இட்டனர்.

பணமாக 69,346 ரூபா கொள்ளை இடப்பட்டது.

இயந்திரத் துப்பாக்கிகளுடன் சங்கக் கட்டடத்தினுள் புகுந்தவர்கள் பொது முகாமையாளரை மிரட்டி அவரிடமிருந்த 33,749ரூபா 35சதத்தை கைப்பற்றினர். பின்னர் 29 400 ரூபாவுக்கான காசோலையைப் பொது முகாமையாளரிடம் இருந்து பறித்தெடுத்தனர்.

அதன் பின்னர் இக்கோஷ்டி களஞ்சியத்தினுள் புகுந்தது. களஞ்சியக் காப்பாளரை பயமுறுத்தி அவரிடமிருந்த 35.597 ரூபா 03 சதத்தைக் கொள்ளை இட்டது.

களஞ்சியத்தில் இருந்த உணவுப் பொருள்களையும் அவர்கள் கொள்ளையிட்டுச் சென்றதாக பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது.

கொள்ளை இடப்பட்ட பணம், காசோலை, பொருள்கள் ஆகியவற்றின் பெறுமதி 1 லட்சத்து 2 ஆயிரத்து 322 ரூபா 10 சதம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் நடத்தவிருந்த உழவர் விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தைப்பொங்கல் திருநாளான இன்று இந்த விழா நடைபெறவிருந்தது.

அண்மையில் பெய்த மழையினால் மைதானத்தில் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது.

போட்டிக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

## வெற்றிவேலு நினைவு தின சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன. 14

டாக்டர் எஸ் ஏ. வெற்றிவேலு நினைவு தினச் சொற்பொழிவு ஜனவரி 18ஆம் திகதி பிற்பகல் வட இலங்கை வைத்தியர்கள் கல்லூரி விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

"மேக நோய்கள்" பற்றி டாக்டர் ரி. சண்முகநாதன் நினைவு தினச் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

வாடிக்கையாளர்கள்
நண்பர்கள், வியாபாரிகள்
அனைவருக்கும்
எமது உளம் கனிந்த மங்களகரமான
பொங்கல் வாழ்த்துக்கள்
ஜோ. எகட்டன்
செனித் மார்க்கட்டிங்
அன்ட்
அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
யாழ்நகர்.
(தோலகட்டி தயாரிப்புகளின் ஏகப் பிரதிநிதிகள்)

மனோகரன் & வெற்றிவேல்
JCC LTD.
தமிழ்மக்களுக்கு மலரும் தைமாதத்தில்
இருள் அகன்று ஒளி பிறக்க
வாழ்த்துகின்றார்கள்!
கமக்காரர்களே!
உங்களுக்குத் தேவையான உரவகைகள், கிருமி நாசினிகளை மிகவும் மலிவாகப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம் J. C. C. Ltd.
மர்ணவர்களே!
உங்களுக்குததேவையான அப்பியாசப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்களுக்கு நாடவேண்டிய ஸ்தாபனம் J.C.C.Ltd.
கட்டடம் அமைப்பவர்களே!
உங்கள் கட்டட வரைபடம், கட்டட நிர்மாணம், கட்டட நீலப்பிரதிகள் என்பவற்றிற்கு மனோகரன் & வெற்றிவேல் ஸ்தாபனத்தை நாடுங்கள்.
J. C. C. Ltd.,
உரும்பராய் சந்தி, உரும்பராய்.
மனோகரன் அன் வெற்றிவேல்,
53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
பொங்கல் நல் வாழ்த்துக்கள்
எம்மிடம் கீழ்க்காணும் பொருட்களை மலிவு விலையில் பெறலாம்.
அப்பியாசக் கொப்பிகள்

| | குரேஸ் ரூபா சதம் | டசின் ரூபா சதம் |
|---|---|---|
| 40—பக்கம் | 160.00 | 15.00 |
| 60—பக்கம் | 250 00 | 21 00 |
| 80—பக்கம் | 300.00 | 28 00 |
| 120—பக்கம் | 800.00 | 70 00 |
| 160—பக்கம் | 950.00 | 82.00 |

கொம்பாசுகள்

| | டசின் ரூபா சதம் | ஒன்று ரூபா சதம் |
|---|---|---|
| நடராசா | — 280.00 | 25 00 |
| மெற்றலிக்ஸ் | — 475 00 | 42.00 |
| சைனு Bota | — 630 00 | 55 00 |
| பென்சில் | | |
| சைனு | — 280 00 | 25 00 |
| இந்தியா | — 140 00 | 12 00 |

மேலும் உங்களுக்குத் தேவையான சகல விதமான பாடசாலைப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் தரமான பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் செல்லவேண்டிய இடம்
"கங்கா"
நாம் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் என்பதை மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அறியத்தருகிறோம்.
" கங்கா என்ரர்பிறைஸஸ் "
தொலைபேசி: 22408.
358, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

றேடியோ, டெக் திருத்துபவர் தேவை
பல வருட அனுபவமுள்ள டெக், ரீ. வி. றேடியோ திருத்துபவர் தேவை. அவர் ஒரு பகுதியை முழுமையாகப் பொறுப்பேற்று நிர்வகிக்கக் கூடிய திறமை உடையவராக இருத்தல் வேண்டும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்பு கொள்க வீனஸ் 266]1 ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்) யாழ்ப்பாணம்.

தைப்பூச சமய தீட்சை
தைப்பூச தினத்தன்று சமய தீட்சை வைக்கும் சமயஸ்தாபனங்கள், தொண்டர் சபைகள், ஆலயங்கள் ஆறுமுகநாவலர் அருளிய சமய அனுட்டான விதியை தபால் செலவுடன் விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற் யாழ்ப்பாணம்.

Kleen Khut
பெண் டெய்லர்கள் தேவை
குழந்தை, மகளிர் ஆகியோருக்கான சகல உடைகள் தைப்பதற்கான பெண்கள் தேவை.
உடன் நேரில் வரவும் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத் தக்கது.
கிளீன் கட்
239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

★ Staring BRUCE LEE
★ Co-Staring BRUCE LI
The Real BRUCE LEE
புருஸ்லீ இரசிகர்களிற்கு
பொங்கல் வெளியீடு
நவா மினி
(உஷாமினி முன்பாக)
248/5, K.K.S. Road,
JAFFNA,

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
இதயம் கனிந்த
பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்
எமது பொஙகல் வெளியீடுகள்:
கமலஹாசன் — மாதவி
(1) மங்கம்மா சபதம் THOMSUN MASTER
கார்த்திக் — அம்பிகா
(2) அர்த்தமுள்ள ஆசைகள் (THOMSUN MASTER)
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

நபீஸா ஜுவல்லர்ஸ் ஸ்தாபனத்தார்
அன்பர்கள், ஆதரவாளர்கள்
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
தமது உள்ளம் கனிந்த
பொங்கல் வாழ்த்துக்களை
தெரிவிப்பதில்
பெரும் மகிழ்ச்சியடைகிறார்கள்.
பழைய பவுன், மிகக் கூடிய விலைக்கு எடுப்பதுடன் 22 கரட் நகைகள் ஓடர் செய்து பெற்றுக் கொள்ளவும் ரெடிமேட் நகைகளை உடன் பெற்றுக் கொள்ளவும் வெள்ளிக் கால் சங்கிலிகள் உடன் பெற்றுக் கொள்ளவும்
சிறந்த ஸ்தாபனம்
நபீஸா ஜுவல்லர்ஸ்
இல. 171, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அருந்துங்கள்
அண்ணா கோப்பி

இப்பொங்கல் திருநாளில் தமிழர் இதயங்களில்
அமைதியும் ஆனந்தமும் பொங்கிட வாழ்த்துகிறோம்!
★ மலாயன் கபே யாழ்ப்பாணம் ★
தொலைபேசி: 22091.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: [illegible] 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
அச்சகம்: 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். வெளியிட்ட திகதி 14-01-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org